
# தூதன்

இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபை

"கர்த்தரைப் பாடி, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரித்து, நாளுக்கு நாள் அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்"

(சங்கீதம் 96:2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாக்குத் தத்தம்

'நான் அவர்களுக்கு என் ஆலயத்திலும், என் மதில்களுக்குள்ளும் குமாரருக்கும், குமாரத்திகளுக்குமுரிய இடத்தையும், கீர்த்தியையும் பார்க்கிலும், உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன், என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன் (ஏசாயா 56:5).


ஆரம்பம் : 1956

மலர் : 52

இதழ் : iii

(ஜுலை, ஆகஸ்ட், செப்டம்பர் 2009)

வருடசந்தா : 60.00

தனி பிரதி : 15.00

ஆசிரியர் : **போல் வில்சன்**

முன் அட்டை வடிவமைப்பு

ஹெப்சிபா வில்சன்

**வெளியீடு** :

இலங்கை கிறிஸ்தவ
சீர்திருத்த திருச்சபை
363, காலி வீதி,
கொழும்பு 06

தொலைபேசி : 2380655

தொலை நகல் : 2582469

அச்சிட்டோர் : கணனி கிராபிக்


**முன் அட்டைப் பட விளக்கம்...**
ஞான ஒளி மாணவர்களுக்கான பிரத்தியேக நிகழ்ச்சி கிழக்கு மாகாண பகுதிகளான காரைதீவு, கல்முனை, திருக்கோவில் பகுதிகளில் கடந்த 15-18.07.2009 நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள்

## உள்ளே...


ஆசிரியர் கடிதம்............................ 03
(குறைவுபடாத நன்மைகள்)
மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? 04
கொஞ்சத்தில் உண்மை................ 07
இயேசுவின் புகழ்.......................... 09
வேதாகமம் ஏன் எழுதப்பட்டுள்ளது.. 10
சீர்த்திருத்த திருச்சபைக்கு
பிறந்தநாள் ................................ 12
சபை செய்திகள்............................ 15
புத்தியுள்ள ஆராதனை ............... 16
ஜோன் கெல்வின் (வரலாறு)......... 18
குறுக்கெழுத்துப் போட்டி.............. 21
புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டை
கட்டுகிறாள்.................................. 22
வேதாகமப் புதிர் ........................ 27
உபத்திரவங்களை அற்பமாய்
எண்ணாதீர்கள் ..................... 28
சிறுவர் பகுதி ............................ 31
தேவனுக்கு கீழ்படிந்திருங்கள்....... 32
கிறிஸ்தவ குடும்ப வாழ்க்கை....... 33
தலைவர்களுக்கு தேவையான...... 34
படங்கள்........................................ 43


## கிறிஸ்துவுக்காக தளிர்க


தேவ வார்த்தையில் வளர்வதும், வார்த்தை, செயல் ஊடாக நம் விசுவாசத்தை பகிர்வதுமான ஓர் விசுவாசிகளின் சமூகமாயிருப்பதே நம் தரிசனமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆசிரியர் கடிதம்

# குறைவுபடாத நன்மைகள்!



தூதன் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் எனது அன்பு வணக்கம்.

இன்றைய சூழ்நிலையில் எமது நாட்டை பார்க்கும் போது ஒருபுறம் பொருளாதார பிரச்சினை, மறுபுறத்தில் அகதிகள் புனர்வாழ்வு பிரச்சினை. இதே போன்று ஒவ்வொரு குடும்பங்களிலும் ஏதோ ஒரு பிரச்சினை காணப்படுகின்றது. அநேகரின் பிரச்சினைகளுள் கடன் பளு, வீடில்லாப் பிரச்சினை தொழில்வாய்ப்பின்மை, பொருளாதார கஷ்டம், குடும்பங்களிடையே ஐக்கிய உறவுயின்மை இப்படியாக இன்னும் பல பிரச்சினைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இப்படியான பிரச்சினைகளுக்கு மூல காரணம் எமக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் அனுகூலங்கள் கிடைக்காமையாகும். குறைவின்றி நன்மைகள் கிடைக்குமானால், எம்மை எந்தப் பிரச்சினையும் அணுகாது என்றே கூற வேண்டும். ஆனால் நன்மைகள் எம்மை அண்டிவருகிறதா? நன்மைகளை அனுபவிக்க கூடியவர்களாக இருக்கின்றோமா?

**"சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங்குறைவுபடாது"** (சங் 34:10) என்று கர்த்தருடைய வேதம் கூறுகிறது. மிருகங்களின் அரசன் எனக் கூறப்படும் சிங்கத்தின் குட்டி கூட பட்டினிக் கிடக்கும் என்று கூறும் வேதவசனம் அதேநேரம் கர்த்ரை தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது என்று அணித்தரமாக கூறி எம்மை விழிப்படையச் செய்கிறது.

இன்று அநேகரின் வாழ்க்கையை ஆராயும் போது, கர்த்தரை ஆதாரமாக் கொண்டு வாழ்க்கையை நடாத்துபவர்களுக்கு பிரச்சினை இருந்தாலும் அவை மனக்கசப்பு, வேதனையை உருவாக்காது. அவைகளுக்கு தீர்வு கிட்டும். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் நிறைய கனிகளைக் கொடுப்பான். நாம் கனிகொடுக்கும் விருட்சமாக திகழவேண்டும் என்பதையே கர்த்தர் விரும்புகிறார்.

எமது நாட்டின் இன்றைய சூழ்நிலையில் வடக்கு - கிழக்கு வாழ் மக்களின் வாழ்வாதாரத்தை சற்று சிந்திப்பது நல்லது. விசேடமாக வன்னி புனர்வாழ் கிராமங்களில் இருக்கும் மக்களைக் குறித்து கரிசனை வைப்பது வரவேற்கதக்கது. எதிர்காலத்தில் இம்மக்களுக்காக நாம் எவ்விதமான உதவி ஒத்தாசைகளை செய்யப் போகிறோம் என்பதை சிந்திப்பது கரிசனையாகும். அதேநேரம் மிகவும் கஷ்டமாக சூழ்நிலையில் வாழும் எமது குடும்ப உறவுகளை நினைப்பது நன்மை பயக்கும். எங்களால் இயன்ற உதவிகளை இவர்களுக்குச் செய்வது அன்பாகும். இம்மக்களின் அனுதின தேவைகளுக்காக ஜெபிக்க கடமைப்பட்டுள்ளோம். இவர்களின் ஒரு நன்மையும் குறைவுபடாதபடிக்கு கர்த்தர் இவர்களை சந்தித்து ஆசீர்வதிப்பாராக. நானும் அனுதிகமும் கர்த்தரை தேடி குறைவுபடாத நன்மைகளால் நிலைத்திருக்க துணைபுரிவராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா?

வண. என். ஆபிரகாம் லிங்கன்

பாலும் தேனும் ஓடும் கானான் நாட்டை நோக்கி பீடு நடைபோடும் இஸ்ரவேல் ஆன்மீக, சரீர வாழ்வில் தம்மை மகிமைப்படுத்தும் மக்களாய் மல்க விரும்பிய தேவாதி தேவன் தொண்டர் மோசே மூலம் நியாயப்பிரமாணத்தை கொடுத்தார். அப்பிரமாணத்தின் ஒரு முக்கிய அம்சமாக அனைத்து வாரத்திலும் **"பத்தில் ஒன்று"** பிரித்தெடுக்கப்பட்டு, கர்த்தராகிய யேகோவாவிற்கு படைக்க வேண்டும். அவை **"கர்த்தருக்குப் பரிசுத்தமானது."**

நாட்கள் நகர்ந்தன, பிரதான ஆசாரியர் ஆரோனின் ஆணையின் கீழ் லேவியர் இறைவன் சமூகத்தில் திருத்தொண்டாற்றிக் கொண்டே இருந்தனர். உண்மையும் உத்தமுமாய் ஊக்கத்துடன் ஊழியம் செய்து வரும் ஆரோனை கர்த்தர் நோக்கி, இஸ்ரவேலர் தேசத்தில் நீ ஒன்றையும் சுதந்தரித்துக் கொள்ள வேண்டாம், அவர்கள் நடுவே உனக்கு பங்கு உண்டாயிருக்க வேண்டாம், இஸ்ரவேல் புத்திரர் நடுவில் நானே உன் பங்கும் உன் சுதந்திரமுமாயிருக்கிறேன். இதோ, லேவியின் புத்திரரின் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடையைச் செய்கின்ற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலேயும் தசமபாகத்தை அவர்களுக்குச் சுதந்திரமாக கொடுத்தேன். இஸ்ரவேல் புத்திரர் நடுவில் அவர்களுக்கு சுதந்திரமில்லை. மேலும், லேவியர் சுதந்திரமாகக் கொடுக்கப்பட்டதில் தசமபாகம் செலுத்த வேண்டும், அந்தப் படைப்பை ஆசாரியனாகிய ஆரோனுக்கு கொடுக்க வேண்டும். எனவே, **பத்தில் ஒன்றும், கர்த்தருக்குப் பரிசுத்தமானது,** ஆசாரியர்க்கு லேவியர்க்கும் செல்கிறது.

எசேக்கியா தன் ஐந்தில் யூதாவின் மேல் மன்னனாக முடிசூட்டப்பட்டு, அரியாசனம் அமர்ந்த வேளை, நாட்டின் சீரழிந்த தன்மையை அகற்ற சீர்திருத்தம் பல செய்திட்டார். அதிமுக்கியமாக கர்த்தருடைய பரிசுத்த ஆலயத்தை செப்பனிட்டு, பலவித பலிகளை தூய்மையுடன் படைத்திட கட்டளையிட்டதுடன், அனைத்து வரவுகளிலிருந்தும் பத்தில் ஒன்றை ஆலயத்திற்கு கொண்டுவரச் செய்து, அவற்றை ஆசாரியருக்கும் லேவியர்க்குமுரியதாக அளித்தார். அடிமைக் கோலத்தில் சூசான் அரண்மனையில் பணி செய்திட்ட வேளையில், தம் ஜனத்தின் நிலை கேட்டு, ஐம்புலன்களும் நெருக்கப்பட்ட நெகேமியா அரசன் அர்தசஷ்டா ஆதரவில் எருசலேமை திரும்பக் கட்டிட்ட போது, அனைத்து செல்வங்களின் பத்தில் ஒன்று ஆசாரியர், லேவியர் வசம் கொண்டு வந்து படைக்கப்பட்டது. இவை ஊழியர், ஊழியம் தாங்கப்பட இறைமக்கள் பத்தில் ஒன்று கொடுக்க வேண்டும் எனப் பகர்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆண்டுகள் நகன்றன, சேனைத்தலைவர் மோசே பிரியும் காலமும் நெருங்க, மேசே மூலம் கர்த்தர் தசமபாகம் செலுத்தும் வருஷமாகிய மூன்றாம் வருஷத்திலே "நீ உன் வருமானத்திலெல்லாம் பத்தில் ஒன்றை எடுத்து லேவியனும், பரதேசியும், திக்கற்ற பிள்ளையும், விதவையும் உன் வாசல்களில் புசித்துத் திருப்தியாகும்படி அவர்களுக்கு கொடு..." என்றார்.

நூற்றாண்டுகள் விரைந்திட தலைமுறைகள் சில அழிந்தன, தீர்க்கராகிய மல்கியா மலர்ந்து, **"மனிதன் தேவனை வஞ்சிக்கலாமா?"** என்றார். எதிலே வஞ்சித்தோம்? எனப் பொங்கியெழுந்தனர். தசம பாகத்திலும் காணிக்கையிலும் என விடையளித்தார். ஜனமே ***"என் ஆலயததில் தசம பாகங்களை எல்லாம் கொண்டு வாருங்கள், அப்பொழுது... உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனாவென்று அதினால் என்னை சோதித்துப் பாருங்கள்"*** என ஓர் சவாலை இட்டார். ஆலயத்தில் தசமபாகங்களை கொண்டு வந்து படை எனக் கூறினாலும், அதற்கு முன்னுள்ள சில வசனங்கள் மூலம் லேவியர் ஆதரிக்கப்படாததினால் சீர்கெட்டுப் போயினர் என்றும் ஏழைகள், விதவைகள், திக்கற்ற பிள்ளைகள் ஒத்தாசையற்று அழிக்கின்றனர் என்றும் பகர்ந்து இஸ்ரவேலர் சாபத்திற்குள்ளாகாதபடி இவர்கள் ஆதரிக்கப்பட தசமபாகம் கொடுக்க வேண்டும் என உணர்த்தப்பட்டனர்.

நியாயப்பிரமாணத்திற்கு அடிமைப்பட்டவர்கள் என்று அவற்றைக் கடைப்பிடித்து வருகின்றோம் எனப் பகர்ந்து மாய்மால வாழ்வு வாழ்ந்த யூதத் தலைவர்களைப் பார்த்து, இயேசு "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும், இரக்கத்தையும் விட்டுவிட்டீர்கள்". நியாயத்தையும் தேவ அன்பையும் விட்டு விடுகிறீர்கள் என்றார்.

இயேசு கிறிஸ்து நாதர் தசமபாகத்தைவிட தாழ்மையும், இரக்கமும், தேவ அன்பும், விசுவாசமும், நீதியும், நியாயமும் உயர்ந்தது என்கின்றாரே! எனவே, பத்தில் ஒன்றல்ல முக்கியம். அது எவ்விதமாக கொடுக்கப்படுகிறது, எவ்விதமாகச் செலவு செய்யப்படுகின்றது, மனிதனின் பண்பு அதில் என்ன என்பதே முக்கியம்.

***பரிசேயனே,*** பத்தில் ஒன்று கொடுக்கின்றாய், நல்லதே, ஆனால் நான் பத்தில் ஒன்று கொடுக்கின்றேன் என்று பெருமையடித்து தேவனை வஞ்சிக்கின்றாய்,

***ஆணவக்காரனே,*** பத்தில் ஒன்று தவறாது செலுத்துகின்றாய், ஆனால் உள்ளத்தில் சபையின் பிறர் நான் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டும் என அதிகாரம் காட்டவிரும்பி தேவனை வஞ்சிக்கிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

*சுயநலவாதியே,* பத்தில் ஒன்று கொடுக்கின்றாய், ஆச்சரியம் தான், ஆனால் பிறர் நலன் விரும்பாது ஜீவிப்பதால் தன்னலத்தால் தேவனை வஞ்சிக்கின்றாய்.

*வேதத்தை அறிந்தவனே,* பத்தில் ஒன்று கொடுக்கின்றேன் என எண்ணிக் கொண்டிருக்கிறாயே, உன் மாத ஊழியத்தில் மாத்திரம் பத்தில் ஒன்று கொடுத்து, இதர வருமானங்களில் ஒன்றும் செலுத்தாது இருந்தால் நீ கர்த்தருடைய பரி. வேதம் அறிந்து பலன் என்ன? பிறர் நலன் பேணாதிருந்தால் உன் விசுவாசம்தான் என்ன?

*பத்தில் ஒன்று கொடுப்பவர்களே,* காணிக்கை மாத்திரம் கொடுத்து ஏனைய தாழ்மை, இரக்கம், தேவஅன்பு, விசுவாசம், நீதி, நியாயம் ஆகிய பணபுகளுடன் விதவைகள், திக்கற்றவர்கள், ஏழைகள், ஊனரை ஆதரிக்காதிருந்தால் நீயும் தேவனை வஞ்சிக்கிறவரே. எனவே உற்சாகத்துடன் உவந்து படைத்து, பிறர் நலனும் கருதி ஜீவிப்பீர்.

## தூதன் சந்தா

தூதன் சஞ்சிகைக்கான சந்தா அனுப்புவது பற்றி பலர் விசாரித்து எழுதியுள்ளனர். நீங்கள் காசோலையாக அனுப்ப விரும்பினால் ***"Christian Reformed Church of Sri Lanka"*** என்று எழுதி குறுக்குக் கோடிடவும், காசு கட்டளையாக அனுப்ப விரும்பினால் Wellawatha Post office இல் மாற்ற கூடியவாறு எழுதவும்.

உங்கள் பெயர், முகவரி, தூதன் கிடைக்கின்றதா? என்பதை குறிப்பிட்டு எழுதவும். காசோலை / காசு கட்டளை அனுப்ப வேண்டிய முகவரி,

**"Thoothan Magazine,**
**Christian Reformed Church of Sri Lanka.**
**363, Galle Road, Colombo 06.**

மருதானை - மாளிகாவத்தை வாழ் கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு

## மாலை ஆராதனை

**காலம்** : **ஞாயிற்றுக்கிழமை**
**நேரம்** : **மாலை 5.00 மணி**
**இடம்** : **இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த சபை**
**55, கிளிப்டன் வீதி, மருதானை**
**கொழும்பு 10**
**(கிளிப்டன் பாலிகாவுக்கு அருகாமையில்)**

தொடர்பு : போதகர் சுரேஸ் கார்மேகம் Tel : 0722827761



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# கொஞ்சத்தில் உண்மை...!

- மொர்தெகாய்

"அவனுடைய எஜமான் அவனை நோக்கி: 'நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியகாரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி' என்றான்" (மத்தேயு 25:21).

தேவன் எம்மில் எதிர்பார்ப்பது உண்மை. நாம் ஒரு சிறிய விஷேயத்தில் தவறுவோமேயானால், எம்மை நம்பி பெரிய காரியங்களை எப்படி ஒப்படைப்பார்கள். ஒருவன் சொல் தவறுவானேயானால் அவனை நம்புவது கடினம். நாம் நடக்கும் பாதையில் பெரிய கற்பாறைகள் அல்ல சிறிய சிறிய கற்கள் தான் ஒருவனை நிலைதடுமாறி கீழே வீழ்ந்துவிட வழிவகுக்கின்றது. சிறிய பாவம் எம்மை மகா பெரிய பாவியாக்கி விடுகிறது. சிறிய சிறிய வேலைகள் எம்மிடம் ஒப்படைக்கப்படும் போது நாம் அதில் உண்மையாக இருக்கின்றோமா என்பதை எம்மை நாமே சோதித்தறிய வேண்டிய காரியமாகும்.

இப்பகுதியில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறிய ஒரு உவமையாகும். ஒருவன் தூர தேசம் புறப்படும் முன், தன் ஆஸ்திகளை தன்னுடைய ஊழியர்களின் திறமைக்குத்தக்கதாக அவர்களுக்கு கொடுத்து, அதன்பின் அவர்களின் முயற்சியின் உண்மை நிலையை அறிதலை குறிப்பதாகும். இன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எம்மிடம் ஒப்படைத்துள்ள காரியங்கள் அல்லது பொறுப்புக்களின் உண்மை நிலையை எதிர்பார்க்கிறார். நாம் அவற்றுக்கு பதிலளிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். கொஞ்சத்தில் உண்மையிருந்தால், அநேகத்தின் மேல் அதிகாரியாக மாறலாம். இன்று எமக்கு கிடைத்துள்ள தாலந்துக்களை நாம் பயன்படுத்தும் மக்களாக காணப்படுகின்றோமா? சுயநலம் கருதி "நான், எனக்கு மட்டும்" தான் என்ற சுயநலமிக்க சிந்தனையில் வாழ்கின்றோமா? எமது தாலந்துகளை கர்த்தர் விரும்பும் செம்மையான வழிகளில் செயல்படுத்துவோம்.

கிறிஸ்தவராகிய நாம் திருச்சபை, அல்லது ஜெப கூட்டங்களில் தேவன் செய்த நன்மைகளைச் சாட்சி கூற வெட்கப்படுகின்றோம். தேவன் எம் வாழ்வில் செய்துள்ள பற்பல நன்மைகளை நாம் கூற தயங்குகின்றோம். இப்படியான சிறிய காரியங்களை குறித்து நாம் வெட்கப்பட்டால், எம் எதிர்கால வாழ்வில் தேவன் செய்யவிருக்கும் பெரிய காரியங்கள் குறித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாம் எப்படி சாட்சி கூறுவோம். எமக்கு தேவன் தந்துள்ள ஆசீர்வாதங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோமா? சாட்சி கூறுவது போன்று சாட்சியாக வாழவும் வேண்டும். கிறிஸ்தவனின் சாட்சியான வாழ்க்கை முன்மாதிரியானது. உண்மை மிகுந்தது.

நாம் பாடசாலை, அலுவலகம், சமுதாயத்தில் உண்மையுள்ளவர்களாக காணப்படுகின்றோமா? எம்மை சார்ந்தவர்களுக்கு நாம் உண்மையுள்ளவர்களாக அதாவது, கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளை, முதலாளி - தொழிலாளி, இப்படிப்பட்டவர்கள் ஒருவருக்கு ஒருவர் உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்களா? இருக்கின்றோமா? கர்த்தராகிய இயேசு கூறுகின்றார் 'கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கின்றான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருககிறான். அநீதியான உலகப் பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புக்கொடுப்பார்கள்?' (லூக்.16: 10-11).

அநீதியுள்ள ஊழியன் உவமையில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த வசனத்தின் மூலமாக "நான் எப்படிப்பட்ட நிலையில் இருக்கின்றேன்" என்று சிந்தித்தால் மட்டுமே உண்மையை அறியலாம். ஆண்டவர் இயேசு தாலந்து உவமையைக் குறித்துக் குறிப்பிடும் போது, ***'எஜமான் அவனை நோக்கி, நல்லது உத்தம ஊழியக்காரனே , நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தபடியால், பத்து பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு'*** (லூக்.19:17) என்று குறிப்பிடுகின்றார். தலையாக மாற வேண்டிய நாம் இன்னும் வாலாகவே காணப்படுகின்றோம். நாம் எப்படிப்பட்ட நிலையில் வாழ வேண்டும் என்று கிறிஸ்துவுக்குள் தீர்மானம் எடுப்போம்.

பரிசுத்த வேதாகமத்தில் நோவா, ஆபிரகாம், யாக்கோபு, மோசே, யோசுவா, சாமுவேல், தாவீது, தானியேல், நெகேமியா, யோபு இப்படியான தேவமனுஷர்களின் வாழ்க்கையை வாசிக்கும் போது, இவர்கள் தேவனுக்கு முன்பாக உண்மையுள்ளவர்களாக இருந்தபடியினால், இவர்களை தேவன் ஆசீர்வதித்தார், உயர்ந்த அடைக்கலத்திலே வைத்தார். இவர்கள் எதிர்நோக்கிய ஆபத்து, துன்பங்களை கூட நன்மையாக மாற்றி, தேவன் ஆசீர்வாதத்தை அருள்மாரி பொழிந்தார்.

'கொஞ்சத்தில் உண்மை' என்னும் போது, நாம் கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்படிவுள்ளவர்களாக காணப்படுகின்றோமோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இக்கீழ்படிவானது கர்த்தரின் விருப்பங்களை எம்மில் நிறைவேற்ற இடங்கொடுப்பதேயாகும். இதன் மூலம் தேவன் பெரிய காரியங்களை எம்மில் நிறைவேற்ற அவர் வல்லமையுள்ளவராக காணப்படுகின்றார். அவர் எமக்குத் தந்துள்ள ஆசீர்வாதங்கள் அல்லது தாலந்துகளை பயன்படுத்தும் போது புதுபுது ஆசீர்வாதங்கள் அலை அலையாக திரண்டுவரும். அது ஜீவ ஊற்றாக எம்மில் சுரக்கும்.

நாம் எந்த நிலையில் இருந்தாலும், கர்த்தராகிய தேவனின் ராஜ்ய பணியை எம்முன் வைத்துள்ளார். அவர் எம்மில் எதிர்பார்ப்பது 'கொஞ்சத்தில் உண்மை'. *'கலப்பையின் மீது வைத்து, பின்னிட்டுப் பார்க்கிறவன் எவனும் பரலோக ராஜ்யத்துக்கு பாத்திரவான் அல்ல'* என்பதை உணர்ந்து இன்றே செயல்படுவோம். தேவனின் சேனையில் இணைந்து அவருக்காக இப்பிரபஞ்சத்தின் லோகாதிபதிகளை எதிர்த்து போராடுவோமாக! வல்லமை நிறைந்த தேவன் எம்மை பலப்படுத்துவாராக.

---

## இயேசுவின் புகழ்



அகிலம் போற்றும் இயேசுவின் புகழை
அழகுத் தமிழில் பாடுவோம்
அன்பின் சின்னம் இயேசுவே
அகத்தில் என்றும் போற்றுவோம்.

சேவை ஒன்றே இலட்சியமாய்ச்
செயல் புரிந்த இயேசுவே
எம் பாவத்தை சிலுவையில் சுமந்த இயேசுவே
எப்போதும் எம்மை காப்பவரே.

வறுமை உற்ற நோயாளருக்கும்
சுகத்தையளித்த இயேசுவே
உலகில் வாழும் ஏழைகளுக்கு
உதவி செய்த எம் தந்தையே.

நாம் நடக்கும் பாதையில்
நல்வழி காட்டுபவரே
கருணைதனைப் போற்றுவோம்
காலமெல்லாம் வணங்குவோம்.

**பீட்டர் பாமினி**
பட்டியகம எஸ்டேட், தெல்தோட்டை
(ஞானஒளி மாணவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வேதாகமம் ஏன் எழுதப்பட்டுள்ளது



போதகர் செல்லதுரை ஜே. சந்ரசேகர் அவர்கள் கொழும்பு இறையியல் கல்லூரி (கொகுவலை)யில் "வேதாகமத்தைக் குறித்த கிறிஸ்தவ கண்ணோட்டம்" என்ற பாடத்தில் ஆற்றிய விரிவுரை குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது.

## முகவுரை

தேவன் தன்னுடைய வார்த்தைகளை, தன்னுடைய பரிசுத்தவான்களைக் கொண்டு எழுதியுள்ளது மாத்திரமல்ல, அதனை தன்னுடைய பரிசுத்தவான்களை கொண்டு அவர் தொகுத்ததுடன், அதனை தம்முடைய கிருபையினால் எமது சொந்த மொழிகளிலேயே மொழிபெயர்த்து, அது எமது கரங்களை வந்தடையும்படி செய்துள்ளார் என்பதை கிறிஸ்தவர்களாகிய நாம் நன்கறிவோம். ஆயினும், அது எதற்காக எப்படியாக தேவனால் எழுதப்பட்டு, அவரது தாசர்களால் தொகுக்கப்பட்டு, எமது சொந்த மொழியிலேயே எமக்கு கிடைத்துள்ளது என்பதையும் அறிந்திருக்க வேண்டியது கிறிஸ்தவர்களாகிய நமக்கு மிக மிக அவசியமாகும். இல்லாவிட்டால் இது வெறும் தலைவீக்கமாக (தலை அறிவாக) மாறுமே அன்றி, அது எமது இருதயத்திற்கு இறங்காது. அது மாறாக, தேவனைக் குறித்த தலை அறிவை மாத்திரம் கொண்டிருந்த ஒரு போதகருக்காக அவரது மகன் ஜெபித்ததை போன்று மாறிவிடும்.

அதாவது, ஒரு போதகருக்கு ஒரு வாலிப மகன் இருந்தான், அவனது தந்தை ஓர் தலைசிறந்த பிரசங்கி. அவர் வேதாகம சத்தியங்களை அழகாக செல்லக் கூடியவரும், ஓர் இறையியல் பண்டிதருமாய் இருந்தார். ஆனால் இவருடைய மகனாகிய அந்த வாலிபன் தன்னுடைய தந்தை கடமையாற்றிய ஆலயத்தில் சென்று. ஒவ்வொரு நாளும் தனது ஜெப வேளையில் **"ஆண்டவரே எனது தந்தைக்குள் இன்னும் ஒரு அடி இறங்கும், இன்னும் ஒரு அடி இறங்கும்"** என ஜெபிப்பான். இதை கவனித்து வந்த அந்த ஆலய பராமரிப்பாளர், ஒரு நாள் அவனிடம் தம்பி ஏன் ஒவ்வொரு நாளும் "ஆண்டவரே எனது தந்தைக்குள் இன்னும் ஒரு அடி இறங்கும் இன்னும் ஒரு அடி இறங்கும் என ஜெபிக்கின்றீர்கள், அது என்ன அந்த ஒரு அடி" எனக் கேட்டாராம். அதற்கு அந்தப் போதகரின் மகன்: "ஆம், ஐயா தேவனைக் குறித்த அறிவு எனது தந்தையின் தலைக்குள் (தலை அறிவு) மாத்திரமே உண்டு, அவர் தேவனை தனது இருதயத்தில் ஏற்றுக்கொள்ளவோ, அவரை தனது இருதயத்தில் நேசிக்கவோ இல்லை. ஆகவேதான் நான் தேவனைப் பற்றி அவரது தலையில் இருக்கும் அந்த அறிவு, அவரது இருதயத்திற்கு இறங்கட்டும் என தினமும் ஜெபிக்கின்றேன்" என்றானாம். அது போலவே நாமும் கூட வேதாகமத்தை குறித்த இவ்வளவையும் அறிந்து (வேதாகமம் தேவனால் எழுதப்பட்டு, அவரது தாசர்களால் தொகுக்கப்பட்டு, எமது சொந்த, மொழியிலேயே எமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கிடைத்துள்ளமையை குறித்து), அது ஏன் எழுதப்பட்டுள்ளது என்பதை கற்காவிட்டால் நமது நிலையும் அதே போலவே ஆகிவிடும். ஆகவே அதைக் குறித்து சற்று விரிவாக பார்ப்போம்.

## 1. திரித்துவ தேவனை பற்றிய அறிவில் வளர

**ஏசா 11:9, 53:11; ஆப 2:14; ஓசி 6:6; ரோம 1:19-**

தேவன் வேதாகமத்தை எமது சொந்த மொழியிலேயே எமது கரங்களில் தந்துள்ளதில் ஓர் முக்கிய நோக்கம் உண்டு.

எனவே தான் **ஓசியா 6:6ல்** பலியை அல்ல இரக்கத்தையும், தகனபலிகளைப் பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும், விரும்புகிறேன என தேவன் கூறுகின்றார்.

தேவனை பற்றி நாம் சரியான அறிவை பெறவேண்டுமானால் அது வேதாகமத்தை கருத்தாய் படிப்பதன் மூலம் மாத்திரமே முடியும். ஏனென்றால், பரிசுத்த வேதாகமத்தின் மூலம் தேவன் மக்களுக்கு தம்மை வெளிப்படுத்தியுள்ளார். எனவே நாம் அவரை பற்றி சரியாக அறிந்து கொள்ளவே தேவன் வேதாகமத்தை தன்னுடைய பரிசுத்தவான்களை கொண்டு எழுதி, அதனை தொகுத்து, அதனை எமது மொழிகளிலேயே மொழிப்பெயர்த்து எமது கரங்களில் கொடுத்துள்ளார்.

ஏனென்றால் மெய்யாகவே எவ்வளவுதான் முயற்சித்தாலும் கூட, எந்த ஒரு மனிதனினாலும் தானாகவே திரித்துவ தேவனைப் பற்றியோ அல்லது தேவனுடைய காரியங்களைப் பற்றியோ அறிந்து கொள்ள முடியாது.

இதற்கோர் நல்ல உதாரணமாக ஆதித்திருச்சபைப் பிதாக்களால் ஒருவரும் மிகச் சிறந்த இறையியலாளருமான **'ஒகஸ்டின்'** அடிகளாரின் வாழ்வில் இடம்பெற்ற ஓர் சம்பவத்தை குறிப்பிடலாம்.

கிறிஸ்தவ இறையியலில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரித்துவ தேவத்துவத்தை குறித்த முழுமையானதும் தெளிவானதுமான விளக்கத்தை எவராலும் கொடுக்க முடியவில்லையே என்ற மனக்குழப்பத்துடன் இருந்த ஒகஸ்டின் அடிகளார் தான் எப்படியாவது இக்குழப்பத்தை தீர்க்க வேண்டும் என்ற சிந்தனையுடன் இருந்தார். இப்படியாக அதைக் குறித்த சிந்தனையோடே இருந்த இவர் அச்சிந்தனையோடே கூட ஒரு நாள் கடற்கரையில் நடந்து கொண்டிருந்தார்.

அப்போது அவர் அக்கடற்கரையிலே, கடற்கரை மணலில் ஒரு சிறு குழியைத் தோண்டி, அதைக் கடல் நீரால் நிரப்பிக் கொண்டிருந்த ஒரு சிறுவனைக் கண்டார். அவனது செயல் ஒகஸ்டினுக்கு வேடிக்கையானதாய்த் தென்பட்டமையால், அவர் அவனை நோக்கி "சிறுவனே நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.

**(40ம் பக்கம் பார்க்க)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# சீர்திருத்த திருச்சபைக்கு பிறந்தநாள்

போதகர் சுரேஷ் கார்மேகம்

367 ஆண்டுகள் (1642 - 2009) எமது திருச்சபை இலங்கையிலே கடந்து வந்த பாதையினை எண்ணி கர்த்தருக்கு நன்றி கூறுகிறோம். 1642ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6ம் நாள் முதலாவது சீர்திருத்த ஆராதனை காலியில் நடைபெற்றதோடு, இலங்கையில் சீர்திருத்த விசுவாசம் விதைக்கப்பட்டது. அந்த வார்த்தையின் விதை இன்று விருட்சமாகி அநேகர் வந்து இளைப்பாறத்தக்கதாக படர்ந்துள்ளது. இலங்கை ஒல்லாந்தர் சீர்திருத்த திருச்சபையாக வழங்கப்பட்டு வந்தது, இன்று இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபையாக மறுவியுள்ளது.

நமது திருச்சபை ஏன் சீர்திருத்த திருச்சபை என்று அழைக்கப்படுகிறது என்றால் எமது திருச்சபைக்கு ஓர் வரலாற்று பின்னணி இருப்பதினால். கி.பி 16ம் நூற்றாண்டு காலத்திலே போப்புக்களின் ஆதிக்கத்தின் கீழ் திருச்சபையானது பரிசுத்த வேதாகமத்தின் சத்தியத்திற்கு விலகி ஆவிக்குரிய அந்தகாரத்துக்குள் மூழ்கியது. அந்நிலையிலிருந்து திருச்சபையை வேதாகம சத்தியத்திற்கு திருப்புவதற்கு முயன்ற முயற்சியின் திவ்விய பலனே சீர்திருத்த திருச்சபையாகும். அதாவது போலி விசுவாசத்தில் இருந்து திருச்சபையை உண்மையான விசுவாசத்திற்கு சீர்திருத்திய வரலாற்று பின்னணியில் உருவானதே நமது **"சீர்திருத்த திருச்சபை"**. நமது திருச்சபையின் தனித்துவமான அடையாளம் என்னவென்றால் தேவனுடைய வார்த்தைக்கு அதிகாரத்தை அல்லது முக்கியத்துவத்தை கொடுப்பதாகும். நாங்கள் அழைக்கப்பட்ட திருச்சபைக்கு உண்மையாய் இருக்கின்றோமா? உண்மையான திருச்சபையின் அடையாளத்தை மூன்று உபதலைப்புக்குள் அடக்கலாம்.

**உண்மையாக தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தல்:**

தேவனுடைய வார்த்தையின் சத்தியம் கறைப்படாது பிரசங்கிக்கிற திருச்சபையாயிருக்கும். போதகர்களாகிய நாம் தேவனுடைய வார்த்தையின் பராமரிப்பாளர்களாய் அழைக்கப்பட்டிருக்கிறோம். எமது பிரதானமான பொறுப்பு தேவனுடைய வார்த்தையை கருத்தோடு கற்றுக் கொண்டு மந்தையாகிய திருச்சபையை திருப்தியாய் போஷிப்பதாகும்.

திருச்சபைக்குரிய அனைத்து ஆவிக்குரிய ஆலோசனைகளும் பரிசுத்த வேதாகமத்தில் இருந்தே பரிசுத்த ஆவியானவர் தருகிறவராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இருக்கிறார். வேதாகமத்தின் சத்தியத்தைக் கறைப்படுத்தத்தக்க எந்த விவகாரத்தையும் திருச்சபையில் அனுமதிக்கக் கூடாது. திருச்சபைக்குத் தேவையான ஆலோசனைகளை வேறு நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளாமல், தேவனுடைய வார்த்தையிலிருந்தே பெற வேண்டும். உலக முறைகளினால் சிந்தனைகளினால் திருச்சபை செல்வாக்கு செலுத்தப்பட அனுமதிக்க முடியாது. சுவிசேஷ சத்தியம் எங்கே உண்மையாய் பிரசங்கிக்கப்படுகிறதோ அங்கேயே உண்மையான விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரால் ஒன்று சேர்க்கப்படுவாகள். நம்முடைய திருச்சபை அனைத்து அம்சங்களும் வார்த்தையின் பணிக்கு அதாவது சுவிசேஷத்தை பிரசங்கிப்தற்கு ஏதுவான சூழலைக் கொடுக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையில் எந்தளவு வாஞ்சையுடையவர்களாய் எமது திருச்சபை இருக்கிறது?

**சரியான முறையில் சாக்கிரமந்துகளை அனுசரித்தல்:**

கிறிஸ்தவர்களுக்கு இரண்டு சாக்கிரமந்துகள் (Sacraments) தரப்பட்டுள்ளது. அவை ஞானஸ்நானமும், இராப்போஜனமும் (நற்கருணை) வெறும் சடங்காக, பாரம்பரியமாக அதை அனுசரிக்காமல் தரப்பட்ட ஆவிக்குரிய நோக்கத்திற்காக அர்த்தத்தோடும் உணர்வோடும் அனுசரிக்க வேண்டும்.

இன்று ஞானஸ்நானத்தை அனுசரிக்க வேதாகம சத்தியத்தின்படி ஆயத்தப்படுத்தப்படுகிறார்களா? அல்லது வெறும் சடங்காக மாறிவிட்டதா? இராப்போஜனத்தைப் பற்றிய சரியான விளக்கம் உண்டா? ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைப் பொறுத்தளவிலே ஞானஸ்நானம் என்பது பரலோகத்திற்கு தகுதிப்படுத்தும் ஓர் புனிதச்சடங்கு. ஆனால் சீர்திருத்த கிறிஸ்தவர்களாகிய நாம் அவ்விதமான போலி நம்பிக்கையோடே அதை அனுசரிப்பதில்லை, மறுபடி பிறந்தாலொழிய ஒருவரும் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை என்ற வேதாகம சத்தியத்தையே வலியுறுத்துகிறோம்.

சிலர் மரணிக்கும் தருவாயில் நற்கருணை பெறுவதற்காக பிரயாசப்படுவார்கள். நற்கருணை பெறுவதால் பாவம் மன்னிக்கப்படுவதில்லை. இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம் மட்டுமே (Faith alone) பாவமன்னிப்பைத் தரும் என்ற வேதாகம சத்தியத்தின்படியே நடத்துகிறோம். ஆகவே, சாக்கிரமந்துகள் தேவனுடைய வார்த்தையின் ஊடாக பரிசுத்த ஆவியானவர் மூலமாகப் பெற்ற உள்ளார்ந்த விசுவாசத்தைத் திடப்படுத்தும் வெளியார்ந்த கிருபையின் சாதனமாகவே சீர்திருத்த திருச்சபையாகிய நாம் அனுசரிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**நேர்மையான ஒழுக்காற்று நடவடிக்கையை நடைமுறைப்படுத்தல்**

விசுவாசத்தின் தூய்மைத் தன்மையையும் சாக்கிரமந்துகளின் தூய்மைத் தன்மையையும் பாதுகாப்பதற்காக ஒழுக்காற்று நடவடிக்கை (exercise of Christian discipline) அவசியமாகும். பரிசுத்தமுள்ள தேவனுடைய சரீரமாகிய திருச்சபையின் பரிசுத்தத் தன்மையை பாதுகாப்பதில் தேவன் அக்கறையாய் இருக்கிறார்.

சகவிசுவாசியின் விசுவாசத்திற்கு இடறலாய் இருக்கும் வண்ணம் அங்கத்தவர் ஒருவர் நடந்துகொள்ளும் பட்சத்தில், தகுந்த முறையில் அவர் தேவனோடு சீர்பொருந்தும் நோக்கத்திற்காக ஒழுக்காற்று செய்தல் மிகவும் அவசியம். உண்மையான மனந்திரும்புதலுக்கூடாக வரும் கனிகளைக் கண்டு திருச்சபை தகுதியான நிலையை குறிப்பிட்ட விசுவாசிக்கு மீண்டும் வழங்க வேண்டும். சில சந்தர்ப்பங்களில் திருச்சபைகளிலே பாவத்தில் ஈடுபட்டவரை கண்டுகொள்ளாமல் விடுவதினால் அவர் மனந்திரும்ப உதவி செய்யாமல் நரகத்திற்கு நேராக இட்டுச்செல்ல வழிவகுக்கின்றனர். வேறுசில சந்தர்ப்பங்களில் ஏதோ ஒரு ஒழுக்க மீறுதலுக்காக விசுவாசிகளை அல்லது ஊழியர்களை விலக்கிவிட்டு மனந்திரும்புதலுக்கு நேராக வழிநடத்தாமல் அல்லது சீர்பொருந்தப் பண்ணாமல் அப்படியே விட்டு விடுகின்றனர். இவ்விரண்டு நிலையும் ஒழுக்காற்று நடவடிக்கையின் நோக்கத்தை நிறைவேற்றவில்லை.

திருச்சபையின் அங்கத்துவத்தை பெற்ற ஒவ்வொருவரும் பரலோக ராஜ்யத்திற்குத் தகுதியானவர்கள் அல்ல, ஆனால் பரிசுத்த ஆவியானவரால் மறுபடி பிறந்த ஒவ்வொருவருமே பரலோகராஜ்யத்திற்குத் தகுதியானவர்கள். திருச்சபையின் அங்கத்துவத்தைப் பெற வருகிறவர்களின் நோக்கத்தை ஆராய ஆயத்தமில்லாத திருச்சபை பொறுப்பாளிகள் தேவனுடைய ராஜ்யத்திற்குத் தடையாயிருக்கும் தற்கால வேதபாரகரும் பரிசேயர்களுமாமார்கள்.

“தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்” (பிலி 1:10-11).


வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, பாமன்கடை வாழ் விசுவாசிகளுக்கு

**காலை ஆராதனை**

காலம் : ஞாயிற்றுக்கிழமை நேரம் : காலை 8.00 மணி
இடம் : இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபை
363, காலி வீதி, வெள்ளவத்தை

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு : சகோ. அஜேந்திரன் 072-3300647




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருச்சபை செய்திகள்



27.06.2009 - ஜோன் கென்வினுடைய 500வது பிறந்த தினத்தை நினைவுகூறும் முகமாக தலைமைத்துவக் கருத்தரங்கு வண. சார்ள்ஸ் ஜேன்ஸ். வண. றொஷான் மெண்டிஸ் தலைமையில் வெள்ளவத்தை கெல்வின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது

01.07.2009 - வாக்குத்தத்த ஆராதனை வூல்வெண்டால் ஆலயத்தில் நடைபெற்றது

06.07.2009 - உபவாசக் கூட்டம் வூல்வெண்டால் ஆலயத்தில் நடைபெற்றது.

06.07.2009 - உபவாசக் கூட்டம் றீஜன் வீதி ஆலயத்தில் நடைபெற்றது.

06.07.2009 - உபவாசக் கூட்டம் கொகுவளை ஆலயத்தில் நடைபெற்றது.

06.072009 - சிரமதான நிகழ்வு கொகுவளை ஆண்கள் சங்க அனுசரணையுடன் ஆலய வளாகத்தில் நடைபெற்றது

11.07.2009 - வூல்வெண்டால் ஆண்கள், பெண்கள் சங்கங்கள் இணைந்து நடத்திய விசேட நிகழ்ச்சி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. 'குடும்ப **வாழ்க்கை சுகமானதா? சுவையானதா?'** எனும் தலைப்பில் பட்டிமன்றமும இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

11.07.2009 - ஆசிரியர் பொதுக்கூட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கான செயற்குழுக் கூட்டம் மாளிகாகந்தை ஆலய மண்டபதில் நடைபெற்றது.

15-18.07.2009 - ஞான ஒளி மாணவர்களுக்கான பிரத்தியேக நிகழ்ச்சி கிழக்கு மாகாண பகுதிகளான காரைதீவு, கல்முனை, திருக்கோவில் பகுதிகளில் நடைபெற்றது.

25.07.2009 - மகளிர்களுக்கான வேதவினா விடை போட்டி வெள்ளவத்தை ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. றீகன் வீதி மகளிர் அணி வெற்றி கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது.

01.08.2009 - வாக்குத்தத்த ஆராதனை வூல்வெண்டால் ஆராயத்தில் நடைபெற்றது.

05.08.2009 - இலவச கண் பரிசோதனை முகாம் தெஹிவளை ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

05.08.2009 - வூல்வெண்டால் வாலிபர் சங்கத்தின் விசேட கருத்தரங்கு ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

05.08.2009 - உபவாசக் கூட்டம் வூல்வெண்டால் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. தென் இந்திய சுவிசேஷகர் சகோ. நெல்லை குமார் தேவ செய்தி வழங்கினர்.

14-15.08.2009 மாபெரும் விற்பனை சந்தை வெள்ளவத்தை ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சமுதாயக் கண்ணோட்டம்:

# புத்தியுள்ள ஆராதனை

சகோ. ஏ. ஞானமணி

**"அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை"** (ரோமர் 12:1).

ஒருவர் நமக்கு ஒரு பரிசுப் பொருளை கொடுத்தால் அவருக்கு ஒரு பரிசைக் கொடுப்பதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருப்போம். ஒருவர் நமக்கு ஒரு வேளை உணவு கொடுத்தால், அவரை அழைத்து நாமும் ஒருவேளை உணவு கொடுக்கிறோம். அவர்கள் நமக்கு செய்ததை யோசித்துப் பார்த்து செயல்படுகிறோம். தேவனாகிய கர்த்தர் அவருடைய இரக்கத்தின் நிமித்தம் நமக்கு செய்ததை யோசித்துப் பார்த்து செயல்படுகிறோமா? கர்த்தருடைய இரக்கத்திற்கு முடிவே இல்லை. கர்த்தருடைய இரக்கமும் கிருபையும் எம்மை மறுபடியும் ஜெநிப்பித்தது. அத்துடன் ஆயிரமாயிரம் நன்மைகளை எமக்கு அனுதினமும் செய்திருக்கிறார். தேவன் எமக்கு செய்த நன்மைக்கு கைமாறாக எதை செய்துள்ளோம்? எதையெதை எல்லாம் செய்ய வேண்டும் என தீர்மானித்துள்ளோம்? சிந்தித்துப் பார்ப்போம்.

நாம் ஸ்தோத்திரக் காணிக்கைகளை தவறாது கொடுக்கலாம், அத்துடன், ஞாயிறுக்கிழமை ஆலயத்திற்குச் சென்று ஒரு மணி நேர ஆராதனையில் கலந்து கொண்டு, ஆராதனை முடிவுற்றதும் வெளியே வந்து, பிறருடன் தகாதாவிதமாக பேசலாம், சண்டை போடுகிறவன் சண்டை போடுகிறான், மற்றவர்களை தூற்றித் திரிகிறவன் தூற்றித் திரிகிறான், குறைகளை தேடுகிறவனும், பேசுகிறவனும் அதையே செய்கிறான். அடுத்த ஞாயிறும் திரும்பவும் ஆலயத்திற்கு சென்று இவைகளையே செய்ய வேண்டுமா என்பதை சிந்தித்துப் பாருங்கள்?

நமது சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். இதுவே தேவன் கேட்கும் ஜீவபலி. நாம் சடங்காச்சாரமாக செய்யும் காரியங்கள் அல்ல, ஜீவபலியாக எம்மை எப்படி ஒப்புக்கொடுப்பது? பரி. வேதம் போதிக்கிறது "நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்" (ரோமர் 6:13).

. "வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுபடுத்தும்" (மத் 15:18) எமது வாயை தேவனுக்கு ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, தாவீது ஆண்டவரிடத்தில் விண்ணப்பம் செய்தது போல் "என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே. என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக" (சங் 19:14) என்று நாமும் சொல்வோம், செய்வோம்.

'என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகையின் மேல் நினைப்பாயிருப்பதெப்படி?'(யோபு 31:1) என்று யோபு கூறியது போல் நாம் எமது கண்களோடே உடன்படிக்கை செய்து கண்களை தேவனுக்கு ஜீவபலியாக ஒப்புக்கொடுப்போம். சங்கீதக்காரன் விண்ணப்பம் செய்தது போல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"மாயையைப் பாராதபடி நீர் என கண்களை விலக்கி, உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும்" என்று தேவனிடத்தில் விண்ணப்பம் செய்து அதன்படி கண்களை காத்துக் கொள்வோம்.

உங்கள் காதுளை ஜீவபலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து நடவுங்கள். நல்ல பங்கை தெரிந்து கொண்ட மரியாளின் காதுகளை போலவும் நல்ல மேய்ப்பனாகிய இயேசுவின் சத்தத்துக்கு செவி கொடுத்து அவர் பின்னால் நடக்க காதுகளை நீதியின் ஆயுதமாக ஒப்புக்கொடுப்போம். நீங்கள் மனம் பொருந்திச் செவி கொடுத்தால் தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்.

குற்றமற்றவர்களுடைய இரத்தத்தை சிந்தும் கைகளை தேவன் வெறுக்கிறார். கர்த்தர் சொல்கிறார், உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது; உங்களைக் கழுவி சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமை செய்தலைவிட்டு விடுங்கள். இயேசுவின் இரத்தம் பாவங்களைக் கழுவ சிந்தப்பட்டது. தாவீது சொல்கிறது போல குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவி, உம்முடைய பீடத்தைச் சுற்றிவருகிறேன் என்றது போல் கைகளை சுத்திகரித்துக் கொண்டு, நன்மை செய்யும் கைகளாக பயன்படுத்துங்கள். எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போன மனுஷனின் வஸ்திரங்களை உரித்து அவனைக் காயப்படுத்திய கள்ளர், கைகளை பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, காயப்பட்டவர்களின் காயங்களை கட்டும் கைகளாக நன்மை செய்யும் கைகளாக, உதவி செய்யும் கைகளாக, நீதியின் ஆயுதமாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.

"ஓட்டதை முடித்தேன், விசுவாசத்தை காத்துக் கொண்டேன்" என்று அப். பவுல் கூறுகிறார். தான் ஓடிமுடித்த ஓட்டத்திற்கு நீதியின் கிரீடம் இருக்கிறது என்றும் சொல்கிறார். காரணம் அவருக்கு நியமிக்கப்பட்ட பாதையில் விசுவாசத்தோடு ஓடினார். ஒவ்வொருவரும் தங்கள் ஓட்டத்தை நடைகளை சிந்தித்துப் பார்க்க வேண்டும். நடக்க வேண்டும். எமது கால்களை எப்படி நீதியின் ஆயுதமாக ஒப்புக்கொடுப்பது? யோபு வழிவிலகாமல் நடந்தார். இரட்டிப்பான ஆசீர்வாதத்தைப் பெற்றார். பாவிகளின் பாதையில் நடக்கக் கூடாது. "வலதுபுறமாவது இடதுபுறமாவது சாயாதே; உன் காலைத் தீமைக்கு விலக்கு வாயாக" (நீதி: 4:27). சரியான பாதையில் எமது கால்கள் நடக்கிறதா? என்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அடிக்கடி அயலான் வீட்டில் கால் வைக்காதே, கர்த்தருடைய பரிசுத்த நாளாகிய ஓய்வுநாளில் உனக்கு இஷ்டமானத்தை செய்யாதபடி உன் காலை விலக்கி, உன் வழிகளின்படி நடக்காதே. உனக்கு இஷ்டமானதைச் செய்யாதே. உன் சொந்தப் பேச்சை பேசாமல், கர்த்தருடைய பரிசுத்த ஓய்வுநாளை மகிமையுள்ள நாளாக எண்ணுவாயாக; உன் நடைகளை சிந்தித்துக் கொண்டு, உன் சகல தீய வழிகளுக்கும் கால்களை விலக்கி வேத வசனம் கால்களுக்கு தீபமாக இருக்க, நீதியின் ஆயுதமாக உன் கால்களை பயன்படுத்து.

"அந்நாளிலே மோசே நீ என் தேவனாகிய கர்த்தரை உத்தமாய்ப் பின்பற்றின படியினால் உன் கால் மிதித்த தேசம் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் என்றைக்கும் சுதந்திரமாயிருக்க கடவது என்று சொல்லி ஆணையிட்டார்" (யோசுவா 14:9).

இன்றே எம்மை நாம் சோதித்து ஆராய்ந்து பார்ப்போம். கர்த்தருக்கு என்று எம் சரீரத்தை ஒப்படைப்போம். எம் சரீரத்தை தேவன் வாழும் ஆலயமாக்குவோம். இன்றே கர்த்தருக்குள் தீர்மானம் எடுப்போம்; எமது வாயின் வார்த்தைகளும், கைகளின் பிரயாசமும், கால்களின் நடையும் கர்த்தருக்குள் ஆசீவதிக்கப்பட்டிருப்பதாக. எம்மை குறித்து தெளிந்துணர்வோம் எம்மை கிறிஸ்துவின் ஆலயமாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாழ்க்கை வரலாறு:



# ஜோன் கெல்வின்

- பழனி லோகநாதன்
அந்தியோக் இறையியல் கல்லூரி,
தென் கொரியா

பதினோராம் நூற்றாண்டில் அதியுயர் புரட்டஸ்தாந்து முறைசார் இறையியலாளா ஜோன் கெல்வின் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.மாட்டின் லூர்த்தர் புரட்டஸ்தாந்தின் முன்னோடியாக இருந்த காலத்தில் கெல்வின் ஒரு சில புரட்டஸ்தாந்துக் கொள்கைகளை ஒன்று திரட்டி, சிறந்த இறையியற் சிந்தனையாளராகத் திகழ்ந்தார். லூர்த்தரின் இரட்சிப்பு விசுவாசத்தினாலான நீதியைக் குறித்து அதி தீவிரமான கேள்விகள் என்பன எப்பொழுதும் இவரது இறையியற் சிந்தனையில் எழக்கூடியதாக இருந்தன. கெல்வின் இரண்டாம் தலைமுறை இறையியலாளராக விளங்கினார். அவரது கிறிஸ்தவ இறையியல் அழிந்து போவதற்குரிய நியாயக் கொள்கைகளுக்கு இடமளிக்கவில்லை: 'அதே வேளை அவர் லூர்த்தர் அதிகமாகப் புறம்தள்ளிய கிறிஸ்தவ விசுவாச எழுச்சிகளுக்கு அதிக கவனம் செலுத்தினார்.- விஷேமாக *"தூய்மை வாதக்கொள்கை"* பற்றிய விடயங்களில்.

## *கெல்வின் வாழ்க்கை*

கெல்வின் 1509 ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 10 ஆம் நாள் பிரான்ஸ் நாட்டிலுள்ள நோயோன் என்னும் சிறு நகரில் பிறந்தார். இக்காலத்தில் தான் மார்ட்டின் லூத்தர் கத்தோலிக்கத் திருசபைக்கு எதிரான தமது விரிவுரைகளை விட்டன்பேர்க் பலகலைக்கழகத்தில் வெளியிட்டார். ஜோன் கெல்வின் தந்தையார் பேராயருக்குச் செயலாளராகவும், தலைமைத் தேவாலயத்தின் பொறுப்பாளராகவும் சேவை செய்தார். இவரது சேவையிலிருந்து கிடைக்கும் வருமானத்திலே தனது மகன் ஜோன் கெல்வின் கல்வி பயில வைத்தார்.

ஜோன் கெல்வின் பாரிஸ் பல்கலைக்கழகத்திலேயே 'மனிதவியல்' பாடத்தில் பட்டதாரியானார். பின்னர் 1528 இல் கலைமானி பட்டதாரியானார். இத்துடன் அக்காலத்தில் இடம்பெற்ற மாட்டின் லூத்தர், வைக் கிளிவ், ஹஸ், ஆகியோரின் இறையியல் பற்றிய ஆய்வுக் கொள்கைகளோடு மிகவும் நெருக்கத்தை உண்டாக்கினார். *"நான் பாப்பாண்டவரின் (POPE) மூட நம்பிக்கைகளுக் கட்டப்படாத வணங்கா முடி"* என்று அவர் பிற்காலத்தில் சொன்னது போல மிகவும் தன்னுடைய கொள்கைகளை உறுதிப்படுத்தலானார். பின்னர், சட்டவியலிலும் தேர்ச்சி பெற வேண்டுமென வாஞ்சை கொண்ட கெல்வின், பையரே டீ ஐயஸ்டோயில், அந்திரேயா அல்சியாட்டி ஆகிய இருபெரும் தலைசிறந்த சட்டவல்லுனர்களிடமும் சட்டம் பயின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

*எழுத்தாளர் கெல்வின்*

கெல்வின் லூத்தரின் சமயப் புரட்சியை நன்கு ஆராய்ந்து கற்றபின், தன்னுடைய ஆத்துமாவின் உள்ளான நிலைபற்றி சிறிது எழுதினார். அவரது இக்கட்டுரையில் ஆதித்திருச்சபைக் கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்வும் மானிடவியல் நோக்கில் தேவ உறவும் அவரது மனநிலையை மாற்றியது. ரோமன் கத்தோலிக்க திருச்சபையை விட்டு நீங்கி புரட்டஸ்தாந்து சபை வழியைப் பின்பற்றத் தூண்டியது.

1535. ஜனவரி கெல்வின் சுவிற்சலாந்துக்குள் உள்ள புரட்டஸ்தாந்து நகரான பாசல் என்னும் பிரதேசத்துக்குச் சென்றார். அங்கே அவர் படிப்பதிலும், எழுதுவதிலுமே தமது காலத்தை செலவழிப்பதற்காக ஆண்டவரினால் அழைக்கப்பட்டதை உணர்ந்தார். அவர் அங்கே வேதத்தைப் படிப்பதற்கும் அதனோடு ஒத்துத் தமது விசுவாசத்தைக் குறித்து எழுதுவதற்கும் ஏற்றதொரு அமைதியான சூழலைத் தேடினார். கெல்வின் பாசல் பிரதேசத்திற்குள் வருவதற்கு முன்னரே "உயிர்த்தெழுதலுக்கு முன்னரான மரித்த ஆத்துமாவின் நிலை" குறித்து ஒரு சிறு தொகுப்புரையை எழுதியுள்ளார். இக்காலம் ரோமன் கத்தேலிக்கத் திருச்சபைகளுக்கும் புரட்டஸ்தாந்து திருச்சபைகளுக்கும் இடையில் பெரிதான போட்டிகளை உருவாக்கிக் கொண்டிருந்த காலம். இன்றைய திக்குழம்பிய காலங்களில் உள்ள திருச்சபை விசுவாசங்களைக் குறித்து தெளிவுபடுத்தும் வகையில் உதவுவதற்காக அவர் இப்படிப்பட்ட மற்றத் தொகுப்புக்களையும் எழுதுவதற்கு எண்ணினார்.

இந்த எழுத்துத்துறையில் அவரது பிரதான செயற்றிட்டம் ஒரு புரட்டஸ் பார்வையிலிருந்து கிறிஸ்தவ விசுவாசம் குறித்த சார அம்சங்களை எழுதுவதாகும். அன்று தொட்டு புரட்டஸ்தாந்து வாயிலான வேத விளக்கவுரைகள்: இத்துடன் அடிப்படைக் கோட்பாடுகளான, திரித்துவம், மாம்சமாகுதல் போன்றவை குறித்தும் எழுதியுள்ளார்.

1536 இல் பாசல் பிரதேசத்தில் வெளியீட்டு நிறுவனத்தை உருவாக்கினார். 516 பக்கங்களைக் கொண்ட நூல் ஒன்றை இந் நிறுவனத்தால் வெளியிட்டார். பிரான்ஸ் நகரம் முற்றிலுமாக இந்நூல் இரகசியமாக வெளியுலாவியது. இது ஆறு அதிகாரங்களை மட்டும் கொண்டது. முதல் நான்கு அதிகாரங்கள் சட்டப் பிரமாணங்களையும், விசுவாசப் பிரமாணங்களையும், கர்த்தருடைய ஜெபம், சாக்கிரமந்துக்கள் பற்றியவையாகும்: இறுதி இரண்டு அதிகாரங்களும், ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் *"பொய்யான சாக்கிரமந்துக்கள்"* சம்பந்தமான புரட்டஸ்தாந்தின் நிலையிலான சுருக்கமான தெளிவுரையும், கிறிஸ்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சுதந்திரமும் போன்ற விடயங்களை உள்ளடக்கியுள்ளதாகும். இந்த நூல் பெரும் வெற்றியையும் மகிழ்ச்சியையும் ஊட்டியது. வேறு நாட்டவர்களும் வாசிக்கக் கூடியதாக இலத்தின் மொழியிலேயே இருந்தது. அக்காலத்தில் இலத்தீன் மொழி பெரும் செல்வாக்கும் பெற்றிருந்த காலம். இந்த நூல் இலத்தீன் மொழியில் இருந்தனால் ஒன்பது மாதங்களில் இது வெளித் தேசங்களிலும் விற்கப்பட்டது. கெல்வின் நூல் வெளியீட்டு நிறுவனத்துக் கூடாக பல பெரும் நூற்களை வருடா வருடம் வெளியிடத் தொடங்கினார்.

## *ஜெனீவாவின் சீர்திருத்தவாதி*

கெல்வின் அனேகமாக புரட்டஸ்தாந்தினரின் வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுவதனைக் குறித்து திடடமிடமில்லை, ஐரேப்பாவின் பல பாகங்கள்ிலும் புரட்டஸ்தாந்து தலைவர்களையே கொண்டிருக்க விரும்பினார். கெல்வின் தமக்குக் கர்த்தர் அளித்த கொடை எழுத்தாளனாக, சிந்தனையாளனாக மட்டுமே இருக்கக் கூடியது என்பதை உணர்ந்தார்.

பின்னர் பிரான்ஸ் தேசத்திற்கு ஒரு சுற்றுலாச் சென்று வந்த கெல்வின் ஸ்ராபோக்கில் குடியேற விரும்பினார். அங்கே புரட்டஸ்தாந்து தூண்டுதல் வெற்றிகரமானதாக இருந்தது. ஆனால் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக ஸ்ராபோர்க் தேசத்திற்குரிய சரியான பாதை மூடப்பட்டுள்ளது. கெல்வின் ஜெனீவாவுக் கூடாகச் செல்ல முற்பட்டார்.


ஜெனீவா நகருள் சென்ற கெல்வின், அங்கே போர்ண எனும் பட்டிணத்திலிருந்து அனுப்பப்பட்ட புரட்டஸ்தாந்து மிஷனரிகளைச் சந்தித்தார். இந்த மிஷனரிகளுக்குத் தலைமை தாங்குபவர் வில்லியம் வ்பெரெல். இந்த மிஷனரிகள், கெல்வின் ஜெனீவா மண்ணில் காலடிவைக்கும் முன்னரே, அங்கே தீவிரமாக தேவசெய்திகளைப் பரப்பி ஒரு புரட்டஸ்தாந்து நாடாக மாற்றிக் கொண்டிருந்தார்கள். பல கத்தோலிக்க திருச்சபை கதவுகள் தாளிட்டு புரட்டஸ்தாந்து திருச்சபைகளாக புத்துயிர் பெற்றுக் கொண்டிருந்தன.

கெல்வின் 1536 இல் ஜெனீவாவுக்குள் வந்ததும், இரு நாட்களுக்கு மேலாக தங்காமல் உட்டனடியாகவே ஸ்ராபோக் தேசத்திற்கு போகும் சிந்தையோடு ஜெனீவா மண்ணில் கால் வைத்தார். ஆனால் ஒரு சிலர் வில்லியம் வ்பெரெல் கெல்வினைக் கண்டு, அகமகிழ்ந்து வரவேற்று உபசாரம் செய்ததையும் குறித்து பிற்காலத்தில் கெல்வின் குறிப்பிட்டிருந்தார். கெல்வின் பின்னர் தனது குறிப்பொன்றில் வில்லியம் வ்பெரெல் பற்றிக் குறிப்பிடுகையில் "*வ்பெரெல் சுவிஷேச முன்னேற்றத்திற்காக கொழுந்து விட்டெரியும் அக்கினி ஜுவாலை*" எனக் குறிப்பிட்டிருந்தார்.


**(36ம் பக்கம் பார்க்க)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# குறுக்கெழுத்துப் போட்டி – 002



குறுக்கெழுத்துப் போட்டி – 1க்கான விடை அடுத்த தூதனில்

**வினாக்கள்**

**இடமிருந்து வலம்**

1. இவன் ஒரு அடிமை ஆனாலும் பவுலின் பேறாமகன்
3. ஆட்டைத் தேடி சென்றவன் இஸ்ரவேலின் ராஜாவானான் (வலமிருந்து இடமாக வருகிறார் ராஜா)
7. ஒரு கோத்திர பிரபு யாக்கோபின் மகனாவார்
8. யோசேப்பின் மகன் கோத்திர பிரபுவானான்

10 இயேசுவின் பிறப்பை முன்னறிவித்த பழைய ஏற்பாடு தீர்க்கதரிசி (குழம்பியுள்ளார்)

12 இது தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவரின் முன்னணையையும் அறியும்....

13.மோசேயுடைய வாய், ஆனாலும் சகோதரன்.

**மேலிருந்து கீழ்**

1. இவன் ஒரு தீர்க்கதரிசி
2. ஆசியாவிலுள்ள ஒரு சபை (கீழ்ருந்து மேல் நோக்கி வருகிறது)
4. வரி வசூலிப்பவன் இயேசுவை காண மரத்தில் ஏறினான் இந்த குள்ளன்.
6. சிம்சோன் பெலிஸ்திய ஸ்திரீயை சந்தித்த இடம்
7. இயேசு ஊழியம் செய்த ஒரு பிரதேசம்.
9. தானியேலில் நண்பர்களில் ஒருவன்
10. சேர்ஷ்ட புத்திர பாகத்தை இழந்தவன் ஆசீர்வாதத்தையும் இழந்தான்
11. அபியாவின் மகன் யூதாவின் ராஜாவானான் (கீழிலிருந்து மேல் நோக்கி வருகிறார்)
12. இது நீரோடைகளை வாஞ்சித்த கதறுமாம் என்று சங்கீதகாரன் குறிப்பிட்டுள்ளான்

***போட்டி விதிகள்***

1 ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்
2. போட்டி கூப்பன் அல்லது இதன் போட்டோ பிரதியை நிரப்பி தபாலட்டையில் ஒட்டி அனுப்புதல் வேண்டும்
3 அதிர்ஷ்டசாலி ஒருவரே தெரிவு செய்யப்படுவார்.வெற்றியாளர் மூவரின் பெயர் பிரசுரிக்கப்படும்.
4. ஆசிரியரின் முடிவு இறுதியானது.
5. போட்டி கூப்பன் அனுப்ப வேண்டிய இறுதி திகதி 15-11-2009

அனுப்ப வேண்டிய முகவரி: **Thoothan Cross Word 001**
**363, Galle Road, Colombo 06.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**மகளிர் மட்டும்:**



# புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டை கட்டுகிறாள்.

**- மேர்சி பெர்னாண்டோ**

இன்றைய உலகில், பெண்கள் சகல துறைகளிலும் வாழ்ந்தும், சாதித்தும் வருகிறாள்.உலகப் பிரகாரமாக பார்க்கும் போது, பணம், அழகு, உயர்கல்வி, பட்டப்படிப்பு மற்றுமன்றி யுத்தமுனையில், வான்வெளியில் பல சாதனைகளை புரிகின்றாள். ஆனால் கிறிஸ்துவை உடைய பெண்களாகிய நாம் எப்படி இருக்கின்றோம்? உலகப் பிரகாரமாக நாம் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் தகுதியுடையவர்களாக இருந்தாலும் எமது ஆவிக்குரிய வாழ்க்கையும், நடத்தையும் எப்படி இருக்கிறது...? புத்தியுள்ள பெண்களாக எமது குடும்பத்தை கட்டுகின்றோமா? அல்லது எமது கைகளாலே அதை உடைத்துப் போடுகின்றோமா? (நீதி. 14:1).

நாம் எமது குடும்பத்தை அதாவது கணவன், பிள்ளைகளை எப்படி மதிக்கின்றோம், நடத்துகின்றோம்? பயன் படுத்துகின்றோம்? எமது வாழ்வை ஒரு உதாரணமாக அவர்களுக்கு முன்பாக இருக்கின்றதா? அல்லது எந்நேரமும் குடும்பத்தில் பிரச்சினை, சண்டை, வாக்குவாதம், கடன் தொல்லை கணவனுக்கும் - மனைவிக்குமிடையில் மனஸ்தாபம் பிரச்சினை ஏற்படுகின்றதா? இதனால் பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுகின்றதா? அடிக்கடி கணவனுக்கும் - மனைவிக்கும் வாக்குவாதங்கள், சண்டைகள் ஏற்படும் போது பிள்ளைகள் அதை கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் இருவருக்குமிடையில் ஏற்படும் வார்த்தைப் பரிமாற்றம் பிள்ளைகளின் மனதின் ஆழத்தில் பதிந்து விடுகின்றது.

கிறிஸ்தவ மனைவிகளாகிய நாங்கள் எப்படி இருக்கின்றோம். எமது வீட்டைக் கட்டுகின்ற பெண்களாக இருக்கின்றோமா? அல்லது அழகான குடும்பத்தை அன்பான இல்லத்தை குழப்புகின்றவர்களாக, உடைக்கின்றவர்களாக இருக்கின்றோமா? எம்மை ஆராய்ந்தவர்களாக எமது பரி. வேதத்திலிருந்து வாழ்ந்து காட்டிய சில பெண்களைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போம்.

- **துர் ஆலோசனை கொடுக்கும் மனைவி**

(*ஆகாப் ராஜாவின் மனைவி - யேசபேல* 1 இராஜா 21:1-25)

பொதுவாக மனைவி தனது கணவனுக்கு ஒரு நல்ல ஆலோசகராக, ஒரு தாயாக, ஒரு குழந்தையாக, அன்பின் ஊற்றாக இருக்க வேண்டும். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

1 இராஜாக்கள் 21ம் அதிகாரம் முழுவதையும் வாசித்துப் பார்த்தால் யேசபேல் ராஜாவின் மனைவியாக இருந்தும், அந்த மேன்மையை ஆசீர்வாதத்தை ஆடம்பரமாகவும், பெருமையாகவும் கொண்டாள். அது மாத்திரம் அல்ல தனது கணவனுக்கு நல்ல ஆலோசனைக் கொடுக்க வேண்டிய இடத்தில் சுயநலத்துடன் தவறான ஆலோசனைகளை கொடுக்கிறாள். மேலும் தனது கணவனின் அதிகாரத்தையும் தன் கையில் எடுக்கின்றாள். அதையும் செயலாற்றுகின்றாள். தவறான முடிவுகளை செயலாற்றுவதனால் அவளின் நிலை மோசமாக முடிந்தது. அதனை 1 இராஜா 21: 23-25 வாசிக்கவும். அவள் ஒரு சபிக்கப்பட்ட ஸ்திரீயானாள்; அவளின் பிணத்தை நாய்கள் தின்றன (11 இராஜா 9:36).

கிறிஸ்துவை இரட்சகராகக் கொண்ட மனைவிகளாகிய நாம் எப்படிப்படவர்களாக இருக்கின்றோம்? எமது கணவனுக்கு நல்ல ஆலோசனைகளை கொடுக்கின்றோமா? அல்லது அவர்களை நாங்களே பாவத்தில் விழுத்தாட்டுகின்றோமா? குடும்பத்தில் கஷ்டங்கள் வரும் போதும் அதற்காக கணவனின் பொறுப்புக்களையும் எமது கையில் எடுத்துக் கொள்கின்றோமா? கணவனை வெறும் பொம்மைகளாக கருதுகின்றோமா? 1கொரி. 11:3 இன்படி கணவனே குடும்பத்தில் தலைவன் (தலை) நாம் எல்லா விடயத்திலும் கணவனுக்கு கீழ்படிந்து வாழவேண்டும் என்று வேதம் மனைவிகளாகிய எமக்கு கற்பிக்கின்றது.

எமது குடும்பத்தில் கஷ்டமான சூழ்நிலையில் குறிப்பாக பண நெருக்கடியில் வாழ்ந்தால் நாம் இருவரும் தேவனுக்கு பிரியமாய் வாழ்ந்தால், கஷ்டங்கள் பிரச்சினைகள் ஏற்பட்டாலும், மற்றவர்களைப் போல வாழ வேண்டும், உடுத்த வேண்டும் என்று கணவனை நச்சரிக்கின்றோமா? எமது கணவனிலுள்ள குறைகளை அடிக்கடி சுட்டிக்காட்டி பேசுகின்றோமா? எமது விருப்பங்கள் நிறைவேற கணவனை தவறான முடிவுகள் எடுக்கவைக்கின்றோமா? அப்படி வாழ்ந்தால் குடும்பத்தில் நிம்மதியின்மை மாறுபாடான வாழ்க்கை (கணவன் ஒருபக்கம் மனைவி வேறுபக்கம்) கடன் பிரச்சினை மனக்கசப்பு இப்படியிருந்தால் அது கர்த்தருக்கு விருப்பமில்லாத வாழ்க்கையாக இருக்கும். நாம் இருவரும் தேவனுக்கு பிரியமாய் வாழ்ந்தால் கஷ்டங்கள் பிரச்சினைகள் ஏற்பட்டாலும் நாம் இருவரும் சேர்ந்து தேவ சமுகத்தில் முழந்தால் படியிடுகின்றோமா? நாம் புத்தியுள்ள ஸ்திரீகளாக இருக்கின்றோமா?

## கணவனை அதிகாரம் செலுத்தாமல் கீழ்படிந்து வாழ்கின்றோமா?

அது மட்டுமல்லாது ஆமானின் மனைவி போன்ற துர்ஆலோசனைக்கு உடன்பட்டு போகின்றோமா? (எஸ்தர் 5:14) ஆமானின் மனைவி சிரேஷ் கணவனுக்கு புத்தி கூறாமல், அவனது துர் ஆலோசனைக்கு உடன்பட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கடைசியாக தண்டனையை ஆமான் அடைகின்றான். ஆமானுக்கு அவன் மனைவி சரியான நல்ல ஆலோசனையைக் கொடுத்திருந்தால், ஆமான் தண்டனையிலிருந்து தப்பியிருப்பான். யேசபேல் - சிரேஷ் போன்ற மனைவிமார்களால் அவர்களின் கணவருக்கு என்ன நடந்தது என்று பரி. வேதாகமம் கூறுகிறது.

அவர்களைப் போல் அல்லது எமது கணவருக்கு எல்லா விடயத்திலும் சரியான ஆலோசனைகளை கொடுக்கின்றோமா? அல்லது அவர்களது பிழையான ஆலோசனைகளுக்கும் பிழையான நடத்தைகளுக்கும் நாம் நீரூற்றுகின்றோமா? ஒத்துழைகிகின்றோமா? அப்படி நாமிருந்தால் குடும்பத்தை சரியாக கட்டமுடியாது. குடும்பம் என்னும் கூட்டை எங்கள் கைகளாலேயே உடைத்து போடுவோம். எம்மை நாமே ஆராய்வோம். கிறிஸ்துவுக்குள் நல் ஆலோசகராகுவோம்.

- **கீழ்படிவு இல்லாத மனைவி:**

***(அகாஸ்வேரு ராஜாவின் மனைவி வஸ்தி எஸ்தர் 1:12)*** வஸ்திக்கு எவ்வளவு ராஜ மேன்மைகள், ஆசீர்வாதமான வாழ்க்கை. கொடுக்கப்பட்டிருந்தது. இருந்தும் தன் கணவனின் வார்த்தைக்கு அவள் கீழ்படியவில்லை, (சபை நடுவில் வரச் சொல்லியும் வர முடியாது என்ற பதில்).

எமக்கு கொடுத்த வாழ்க்கை துணைவருக்கு நாம் எப்படியிருக்கின்றோம். பரி. வேதம் கூறுகின்ற மனைவிமார் எல்லா விடயத்திலும் கணவனுக்கு கீழ்படிய வேண்டும் என்று (எபே 5:24) கூறுகிறது. ***"திருச்சபை கிறிஸ்துவுக்குப் பணிந்திருப்பது போல மனைவியரும் தங்கள் கணவருக்கு அனைத்திலும் பணிந்திருக்க வேண்டும்."*** (கொலோ 3:18) அதேயே சொல்கின்றது.

நாம் கர்த்தரால் எமக்குத் தந்த எமது கணவருக்கு எல்லாவற்றிலும் கீழ்படிய வேண்டும். நாம் எப்படிப்பட்டவராக இருந்தாலும் பணத்தால், குணத்தால், படிப்பால், அழகால், உயர் பதவியில் இருந்தாலும் கணவருக்கு எல்லாவிதத்திலும் மேற்பட்டவர்களாக இருந்தாலும் எமது கணவருக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் என்று கர்த்தருடைய வேதம் எமக்கு போதிக்கிறது.

நாம் எமது கணவருக்கு கீழ்படிவு இல்லாமல் இருக்கும் போது எமது பிள்ளைகளும் அப்படியே வளருகின்றனர். பின்பு குடும்பத்தால் பிரச்சினைகள் தலைவிரித்து ஆடும். பிள்ளைகளும் எங்களைப் பின்பற்றி ஒரு கீழ்படிவு இல்லாதவர்களாக வளருவார்கள். நாம் எமது குடும்பத்தில் முதலில் சாட்சியாக வாழுவோம். கீழ்படிவுள்ளவர்களாக, எமது கணவனின் இதயத்திற்கு ஏற்ற மனைவியாக கர்த்தரின் பெலத்துடன் வாழுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**• தூஷிக்கிற மனைவி** (யோபு 2:9)

யோபுவின் வாழ்க்கை சரித்திரத்தை பழைய ஏற்பாட்டு திருமறையில் வாசித்திருக்கிறோம். அதில் யோபுவின் மனைவி கஷ்டங்கள் பிரச்சினைகள் வரும் போது தனது கணவனை அவர்கள் நண்பர்கள் முன்பாகவே தூஷிக்கிறாள். ஆசீர்வாதங்கள் எமக்கு கிடைக்கும் போது, நாம் சந்தோஷமாக இருக்கின்றோம். சில வேளை அவைகள் எமது குடும்ப வாழ்வில் கிடைக்காமல் போகும் போது எமது வாழ்வில் ஜெபமில்லை, வேத வாசிப்பு இல்லை. தேவனையே மறந்து எந்த நேரமும் கணவனை முறுமுறுத்து, கணவனையும், எம் தேவனையும் தூஷிக்கின்றோம். நாம் எதை செய்தாலும் எமது பிள்ளைகள் எங்களை கவனித்துப் பார்க்கிறார்கள். சில மனைவிமார் தன் சொந்த கணவனையே கெட்டகெட்ட வார்த்தைகளால் கூட ஏசுவார்கள் (திட்டுவார்கள்). நாம் எப்படியிருந்தாலும் தேவனையும் கணவனையும் நேசித்து அவர்களுக்கு கீழ்படிந்து பணிவுடன் வாழ்வோம்.

**• அன்பும் தியாகமும்**

***(ஆதி 24:67 ஈசாக்கு – ரெபேக்கள்)*** ரெபேக்களள் அன்பும் அடக்கமும் நிறைந்தவள் என்ற பரி. வேதத்தில் பார்க்கின்றோம். தன் தாயின் மறைவன் துயரத்தை ஒரு மனைவியால் தான் ஈடுசெய்ய முடியும்.

அன்பும் தியாகமும் நிறைந்த நல்ல மனைவியாக நாம் வாழும் போது எமது குடும்ப வாழ்க்கை மிகவும் இன்பமாக இருக்கும். நாம் எமது கணவனுக்கு கண்ணிகளாக இராதபடிக்கு நல்ல ஆலோசனை கொடுக்கிற நல்ல மனைவிகளாக வாழுவோம். ஒரே சிந்தையும் ஒரு செயற்பாடும் நிறைந்தவர்களாக வாழுவோம். எப்போதும் எல்லா விடயத்திலும் உண்மையுள்ளவர்களாக வாழ்வோம். அப்போது எமது குடும்ப வாழ்வில் பல ஆசீர்வாதங்களை பெற்று வாழலாம். மனைவிமார்களின் நடத்தையால் நாம் எமது பிள்ளைகளின், கணவனின் அன்பை சம்பாதித்துக் கொள்ளலாம். நல்ல மனைவியின் நடத்தை மூலமும், ஜெபத்தின் மூலமும் கெட்ட கணவனையும் நல்ல வழிக்குள் கொண்டு வரலாம். நாம் எப்படிப்பட்ட மனைவிமார் நாம் எமது கணவனால் புகழப்படுகின்றோமா? நீதி 19:14 இப்படிக் கூறுகிறது ***"வீடும் சொத்தும் ஒருவனுக்கு வழிவழிச் சொத்தாய் வரலாம், ஆனால் விவேகமுள்ள மனைவியோ ஆண்டவர் அளிக்கும் கொடை".***

சங்கீதம் 128:3 நாம் கனி கொடுக்கிற வாழ்வில் ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறவர்களாக இருக்கிறோமா? அன்பு எப்படிபட்டதாக இருக்கின்றது. எமது அன்பால் கணவனையும், பிள்ளைகளையும் கட்டுகின்றோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒரு மனைவி தனது கணவன் மீது வைத்திருக்கும் அன்பு அவள் அவனுக்காக செய்யும் காரியங்களில் இல்லை அதாவது சமைத்து போடுதல், வீட்டை கவனித்தல் , அத்துடன் கணவனுக்கு செய்ய வேண்டிய பணிவிடைகளையும் செய்தல். இது போதும் தானே என்று கூறுவார்கள் சில மனைவிமார்கள். இதையும் கடமைக்காகச் செய்வார்கள் (1கொரி. 7:3) *அவள் தன் சுய சரீரத்திற்கு அதிகாரியாகாமல் புருஷனே அதற்கு அதிகாரியாக இருக்கிறான* (1கொரி. 7:4) அவள் தன்னை முற்றிலுமாக தன் கணவனிடம் அர்ப்பணிப்பதன் மூலமாகவே கர்த்தர் ஒரு மனைவியிடம் எதிர்பார்க்கும் அன்பை அவளால் வெளிப்படுத்த முடியும். .. கணவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் தன்னை எப்படி நடத்துபவனாக இருந்தாலும் தன்னை முற்றிலுமாக அவனிடம் அர்பணிப்பவளே உண்மையான கிறிஸ்தவ மனைவி. ஏனெனில் அன்பு தன்னை கொடுக்கும்.

- **ஆண்டவர் எம்மிடம் எதிர்பார்ப்பது என்ன?**

நாம் எமது குடும்பத்தை கட்டுகின்ற நல்ல மனைவியாக வாழ வேண்டும் என்பதையே கர்த்தர் விரும்புகின்றார். குடும்பங்களைப் பிரிப்பவர்களாக சண்டைகளை மூட்டுகின்றவர்களாக குடும்ப பிரிவுகளுக்கு காரணர்களாக நாம் இல்லாது கர்த்தருக்குப் பயந்து எமது கணவருக்கு எல்லா விடயத்திலும் கீழ்ப்படிந்து ஒரு நல்ல மனைவியாக, தாயாக, சகோதரியாக, ஜெபிக்கின்ற பெண்களாக வாழ்ந்து, கிறிஸ்து இயேசுவுக்கு ஒரு சாட்சியுள்ள நடமாடும் நிருபங்களாக வாழ்ந்து காட்டுவோம்.

நாம் துர்ஆலோசனை கொடுக்கிறோமா? கீழ்படிதல் இல்லாதவர்களாக, துஷிக்கிறவர்களாக அல்லது அன்பும் தியாகமும் எம்மிடத்தில் உண்டா?. கிறிஸ்து இயேசுவையே எமக்கு முன்வைத்து எமது அழகான குடும்பத்தை கிறிஸ்து இயேசுவாகிய கன்மலையின் மேல் காட்டுகின்ற பெண்களாக தாயாக் திகழுவோம். தீர்மானிப்போம். செயற்படுவோம்.


## இலவச வேதபாடம்

பாடசாலை மாணவர்களுக்காகவும் மற்றும் கிறிஸ்துவை அறியாதவர்களுக்காகவும் இலவச வேதபாடம் ஞான ஒளி நிறுவனத்தினூடாக நடைபெறுகிறது. பாட இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

**தொடர்பு முகவரி GNANA OLI**
**363, Galle Road, Wellawatta, Colombo 06**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வேதாகமத்தை ஆராயுங்கள்::

# வேதாகமப் புதிர் 31

**விதிமுறைகள்:**

1. பொதுவாக யாவரும் பங்கு பற்றலாம்
2. ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்
3. விடை தபாலட்டையில் எழுதி அனுப்பப்படல் வேண்டும்.
4. விடை பரிசுத்த வேதாகமத்தின் அதிகாரம், வசனம் குறிப்பிடல் வேண்டும்.
5. தெரிவு செய்யப்படும் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கே பரிசு வழங்கப்படும்.
6. தீர்ப்பு ஆசிரியருக்குரியது.
7. விடைகள் அனுப்ப வேண்டிய இறுதி திகதி 15-11-2009

**கேள்விகள் :**

1. **மோசே மரிக்கும் போது எத்தனை வயதுள்ளவனாயிருந்தான்?**
2. **"யெகோவா ஷாலோம்" என்ற பெயரில் கர்த்தருக்கு பலிபீடத்தை கட்டியவன் யார்?**
3. **சிம்சோன் பெலிஸ்தரின் வெள்ளாண்மையை அழிக்க எத்தனை நரிகளை பிடித்தான்?**
4. **நகோமியின் கணவருடைய பெயர் என்ன?**
5. **அன்னாள் - பெனின்னாள் ஆகியோரின் கணவனின் பெயர் என்ன?**
6. **மோசேவுடைய சரீரத்தை குறித்து பிசாசுவுடன் தர்க்கித்தவன் யார்?**
7. **"இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" யாரால் யாருக்கு கூறப்பட்டது.**

இவ்வசனங்கள் பரி. வேதாகமத்தில் எங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. பரி. வேதாகமத்தின் அதிகாரம், வசனங்களை தபாலட்டையில் குறிப்பிட்டு எழுதி அனுப்பவும்.

விடைகளை எழுதும் போது உங்கள் பெயர், முகவரியை குறிப்பிட மறக்க வேண்டாம்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**Bible Quiz -31**

**Thoothan, 363, Galle Road, Colombo - 06**

# வேதாகமப் புதிர் 30

விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்

❑ தூதன் குறுக்கெழுத்துப் போட்டி, வேதாகமப் புதிர் போட்டியில் அநேகர் வாஞ்சையுடன் கலந்து கொள்கின்றனர். இவர்களுக்கு தூதனின் பாராட்டுக்கள்.

*தெஹிவளை, கல்கிஸ்ஸ, கரகாம்பிட்டிய, வெள்ளவத்தை விசுவாசிகளுக்கு*

## காலை ஆராதனை

காலம் : பிரதி ஞாயிறு தோறும்

நேரம் : காலை 10.00 மணி

இடம் : *இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபை*

ஸ்டேசன் வீதி, தெஹிவளை

தொடர்பு : போதகர் வீ: ஜெயசீலன் 2812208 or 0757127635



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உபத்திரவங்களை அற்பமாய் எண்ணாதீர்கள்

**தே**வ பக்தியுடன் வாழும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஏதாவது ஒரு வகையில் உபத்திரவத்தை அனுபவிக்கிறதுண்டு. இயேசு கிறிஸ்துவின் சுவிஷேசத்தையும், சத்தியத்தையும் எதிர்க்கிற மக்களை நாம் நாளாந்தம் எமது சமுதாயத்தில் குடும்பத்தில் காண்கின்றோம். கிறிஸ்தவர்கள் எதைப் பேசினாலும், செய்தாலும் குற்றம் கண்டுபிடிக்க ஒரு கூட்டம் உண்டு. **"பற்றி எரியும் அக்கினி"** போன்ற உபத்திரவங்களைப் பற்றி 1பேதுரு 4:12-19 இல் எழுகிறார். இத்தகைய **'அக்கினி சோதனை'** திருச்சபை முழுவதையும் தாக்கக் கூடியது.

கிறிஸ்தவர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் உபத்திரவத்தைப் பற்றி பேதுரு எழுதவில்லை. அவரது காலத்தில் ரோம அரசாங்கத்தின் மூலம் ஏற்படவிருந்த உபத்திரவத்தையே அவர் இங்கு குறிப்பிட்டுள்ளார். யூதமார்க்கத்தின் ஒரு பிரிவாக, **'கிறிஸ்தவம்'** அக்காலத்து ரோமர்களால் கருதப்பட்டது. கிறிஸ்தவர் சுதந்திரமாக ஆராதிக்க அனுமதி இருந்தது. ஆனால் நீரோ (Nero) என்ற ரோமனிய மன்னன் மூலம் முதன் முதலில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக அக்கினி பற்ற வைக்கப்பட்டது.

வரவிருக்கும் **"அக்கினி சோதனையின்"** மத்தியில் தமது சபை விசுவாசிகள் என்ன செய்ய வேண்டும் என்று நான்கு அறிவுரைகளை பேதுரு இங்கு குறிப்பிட்டு எழுதுகிறார்.

## உபத்திரவத்தை எதிர்பாருங்கள்:

**'உபத்திரவம்'** என்பது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அப்பாற்பட்டதல்ல. தேவனை விசுவாசிக்காத இவ்வுலக மக்களின் மூலமாக தேவபிள்ளைகள் பாடு அனுபவித்துள்ளதற்கு சரித்திரமே சாட்சி. கிறிஸ்தவர் அவிசுவாசிகளைப் போலிருக்கமாட்டார்கள். அவர்கள் வித்தியாசமானவர்களாய் இருப்பதால், அவர்களது வாழ்க்கை முறையும் வித்தியாசமானதுதான் (2கொரி. 6:14-18). பொய், பெருமை, சிற்றின்பம், 'இன்னும் இன்னும் வேண்டும்' என்ற வாஞ்சை ஆகியவற்றைச் சார்ந்தே இவ்வுலகின் பெரும்பான்மையான நிகழ்வுகள் அமைந்துள்ளன. ஆனால் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவன், தனது வாழ்க்கையை, சத்தியம், தாழ்மை, பரிசுத்தம், தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்ற வாஞ்சை போன்றவற்றால் கட்டி எழுப்புகிறான்.

இவ்விரு வாழ்க்கை முறைகளைப்பற்றி, வேத புத்தகத்தில் விபரித்து சொல்லப்பட்டிருக்கிறது. காயீன் ஒரு கடவுள் நம்பிக்கையுடைய நபராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இருந்தும் தனது சகோதரனை வெறுத்தான். ஆபேலைக் கொலை செய்து விட்டான் (ஆதி. 4: 1-8). 'கடவுள் நம்பிக்கையுடைய' மக்களை உலகம் துன்புறுத்தாது, ஆனால் 'நீதியைப் பின்பற்றும்' மக்களை உலகம் நிச்சயம் துன்புறுத்தும். காயீன் தன் சகோதரனாகிய ஆபேலை கொன்றதன் காரணத்தை 1 யோவான் 3:12 இல் வாசிக்கலாம். 'அவன் எதன் நிமித்தம் தன் சகோதரனை கொலை செய்தான்?' தன் கிரியை பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியை நீதியுள்ளவைகளுமாய் இருந்ததினிமித்தம் தானே'. பரிசேயர்களும், யூத மக்களின் தலைவர்களும், கடவுள் நம்பிக்கையுடையவர்கள்தான். இருப்பினும். அவர்கள் கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தும், ஆதி சபையைத் துன்பப்படுத்தியும் மகிழ்ந்தார்கள்.

**'மனுஷரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் உங்களை ஆலோசனை சங்கங்களுக்கு ஒப்புக்கொடுத்து, தங்கள் ஜெப ஆயங்களில் உங்களை வாரினால் அடிப்பார்கள்...'** (மத். 10:17) **என்றார் இயேசு. தேவ சபையிலேயே தேவமக்கள் வாரினால் அடிப்பார்கள் என்பதை கவனியுங்கள்.**

ஆதாமின் வீழ்ச்சிக்கும் பின் தேவன் சாத்தானுக்கு எதிராக யுத்தம் செய்யத் தொடங்கினார் (ஆதி. 3:15). அந்நாளிலிருந்து சாத்தானும் தேவனது பிள்ளைகளை உபத்திரவப்படுத்தி, தேவனை எதிர்க்கலானான். இவ்வுலகத்தின் அதிபதி சாத்தான் இருக்கும் போது (யோவான் 14:30, 2கொரி. 4:3-40), கிறிஸ்தவர் இவ்வுலகில் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறார்கள். தேவனை மகிமைப்படுத்துகிற அனைத்தும் சாத்தானுக்கு கோபத்தை தூண்டும். எனவே சாத்தான் தாக்கத் தொடங்குவான். இத்தகைய உபத்திரவங்கள் விசுவாசிகளுக்குப் புதுமையாக இருப்பதில்லை. சாத்தானின் எதிர்ப்பு இல்லாதிருந்தால் தான் கிறிஸ்தவர்களுக்கு புதுமையாகத் தோன்றும்.

உலகத்திலிருந்து எதிர்ப்புகளையும், உபத்திரவங்களையும் சீஷர்கள் எதிர்பார்க்க வேண்டும் (யோவா 15:17- 16:4) என்று இயேசு விளக்கியுள்ளார். இதேவேளை அவர்களை உற்சாகப்படுத்தும் வாக்குத்தத்தையும் அவர்களுக்கு அளித்தார். **"உலகத்திலே உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்"** (யோவா. 16:33). சிலுவை மரணத்தின் மூலமாகவும், தம்து உயிர்த்தெழுதலின் மூலமாகவும், இயேசு கிறிஸ்து பாவத்தையும், இவ்வுலகத்தையும் ஜெயித்தார் (யோவா. 12:23-33, கலா. 6:14).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**'அக்கினி'** என்ற பதம் இக்காலத்திலும் ஒரு மனிதன் கடந்து போகும் கடினமான அனுபவங்களை வர்ணிக்கப் பயன்படுகிறது. பழைய ஏற்பாட்டின் காலத்தில், தேவனது பரிசுத்தத்தையும் அவரது பிரசன்னத்தையும் குறிக்க 'அக்கினி' பயன்படுத்தப்பட்டது. பலிபீடத்தின் அக்கினி பலிகளை பட்சித்தது (எபி. 12:28-29). ஆனால் பேதுருவோ அக்கினியின் மற்றொரு குணாதிசயத்தைக் கவனிக்கிறார். அது வேத நியாயத்தீர்ப்பாய் மட்டுமல்லாமல், சுத்திகரிக்கும் வல்லமையையும் பெற்றுள்ளது (1பேது. 1:7, யோபு 23:10) என்று பேதுரு இங்கு விளக்குகிறார்.

வாழ்க்கையில் நாம் சந்திக்கும் எல்லா சோதனைகளும் 'அக்கினி சோதனை' என்ற கூறமுடியாது. கஷ்டமான சில அனுபவங்கள், மனித வாழ்க்கையின் பகுதிதான். அவற்றை எல்லா மனிதர்களும் அனுபவிக்கிறார்கள். கீழ்ப்படியாமையினாலும், பாவத்தினாலும் சில கஷ்டங்களுக்குள்ளாவது உண்டு. ஆனால் 1பேதுரு 4:12 இல் கூறப்பட்ட 'அக்கினி சோதனை', நாம தேவனை விசுவாசிப்பது உண்மையாயிருப்பதாலும், நீதிக்கு துணை நிற்பதாலும் வருவதாகும். நாம் கிறிஸ்துவின் நாமத்தை தரித்திருப்பதால், இவ்வுலகம் எம்மை எதிர்க்கும். உலகம் இயேசுவை எதிர்த்தது போல அவரது சீஷர்களையும் எதிர்க்கும் என்றும், அவ்வாறு அவர்களைத் துன்பப்படுத்துகிறவர்கள் தேவனை அறியாதவர்கள் (யோவா. 15:20-21) என்று இயேசு விளக்கியுள்ளார்.

**உபத்திரவத்தில் மகிழ்ச்சி:**

**"களிகூர்ந்து மகிழுங்கள்"** என்று பேதுரு எழுதுகிறார். இங்கு **மகிழ்ச்சி, களிகூருதல், சந்தோஷம், பாக்கியம்** என்று நான்கு விதங்களில், உபத்திரவங்களின் மூலம் அடையும் மகிழ்ச்சியை அவர் வெளிப்படுத்துகிறார். உலகம் தேவ கிருபையை அனுபவித்திராததினால், உபத்திரவங்கள் எப்படி மகிழ்ச்சியை உண்டாக்க முடியும் என்று புரிந்து கொள்ள முடிவதில்லை (2பேதுரு 4:12-14). அக்கினி சோதனையினால் தாக்கப்பட்ட விசுவாசி எத்தகைய பாக்கியங்களை அடைகிறான் என்று பேதுரு எழுதுகிறார்.

***அ) நமது பாடுகள் கிறிஸ்துவோடு ஐக்கியம் கொள்ளச் செய்கிறது*** (1பேதுரு 4:3):

உலகம் இயேசு கிறிஸ்துவை எப்படி கேவலமாக நடத்தியதோ, அதேபோல நாமும் நடத்தப்படுவதினால் அவரோடு நாம் பாடு அனுபவிக்கிறவர்களாகிறோம். இது ஒரு சிறந்த பாக்கியம். கிறிஸ்துவினிமித்தம் நாம் பாடுகள் அனுபவித்தால் அது, தேவன் நமக்கு கொடுக்கும் **'அருள்'** என்று பிலிப்பியர் 1:29 இல் வாசிக்கிறோம்.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறுவர் பகுதி

சிறுவர்ளே,

உங்கள் உதவி தேவைபடுகிறது, சரியான வீதியினூடாக கடந்து செல்ல தூதனுக்கு உதவுங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள் பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்

ஜெயமணி வில்சன்

"தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்" (யாக் 4:7). உலகத்துக்குள் முதல் பாவம் கீழ்ப்படியாமையினால் வந்தது. ஆதி பெற்றோர் தேவன் கொடுத்த கட்டளையை மீறி சாத்தானுடைய வார்த்தையை நம்பி செயல்பட்டதால் தேவ கிருபையை இழந்து ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டார்கள் தீமையை நன்மை என்று சாத்தான் காட்டியதால் அதற்கு கீழ்ப்படிந்து தேவனை விட்டு தூர போனார்கள். ஆகையால், தேவன் தனது அநாதி திட்டத்தை வெளிப்படுத்த முடியாமல் ஆசீர்வாதங்களை இழந்து, சாபத்தை தேடிக் கொண்டார்கள்.

"திருடன் திருடவும், கொல்லவும் அழிக்கவுமேயன்றி வேறொன்றுக்கும் வாரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அவை பரிபூரணப்படவும் வந்தேன்" என்றார் கிறிஸ்து இயேசு. இந்த உலகத்திலே நம்மை குழப்பும் ஒரு எதிரி எப்போதும் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் சுற்றி திரிகிறான். வேதத்தில் சாத்தானை எதிரி என்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அவன் சத்திய வேதத்திற்கு புறம்பாக கிறிஸ்துவின் பிள்ளைகளின் மனதை குருடாக்கி, தனது சத்தத்திற்கு நேராக வழிநடத்துகிறான். உண்மையை பொய் என்றும் பொய்யை உண்மை என்றும் திரித்து உலக ஆசாபாசங்களையும், சிற்றின்பங்களை காட்டி ஒழுக்கக்கேடான நடத்தைகளில் ஈடுபடச் செய்கிறான். தீமையை நன்மை என்று நியாயம் காட்டி வாதிடுவதில் சாத்தானுக் கைவந்த கலை. எப்படியாவது, மனித மனசாட்சியைக் கெடுத்து, பொய் சொல்லி ஏமாற்றுவதில் அவனுக்கு நிகர் யாரும் இருக்க முடியாது. தேவனுடைய பிள்ளைகளை அழித்து, தேவன் அவர்கள் பேரில் வைத்திருக்கும் சகல விதமான ஆசீர்வாதங்களையும் கொள்ளையிடுவான்.

யோவான் 8:44 இல் "பிசாசு பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான்." ஒரு விசுவாசியின் வாழ்க்கையை அழிப்பதற்கு அவன் வல்லமையாக, எல்லாவிதமான தந்திரங்களோடும் அவனைத் சுற்றி கொண்டேயிருப்பான். நமது பலவீனம் எங்குள்ளதென கண்டறிந்து. கொஞ்சங்கொஞ்சமாக கவனத்தை திசை திருப்புவான். ஆதியிலே ஏவாளை சாத்தான் பொய் சொல்லி வஞ்சித்தது போல், எங்களது மனங்களையும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று, விலகும்படி செய்ய வாசற்படியிலேயே கண்ணிகளை வைப்பான். ஆகையால், நாம் எப்போதும் பிசாசின் தந்திரங்களுக்கு எதிர்த்து நிற்க தேவனுடைய சர்வாயுத வர்க்கங்களை தரித்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இன்று வாழ்க்கை வளமாய் இருப்பதற்கு அநேக குறுக்கு வழியை தேடுவதால் தீமை நம் கண்களை மறைக்கின்றது. மனச்சாட்சி மந்தமாக்கப்பட்டு, தவறாக காரியங்களையும் துணிகரமாக செய்ய தூண்டுகிறது. "தீமையை நன்மை என்றும், நன்மையை தீமை என்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ" (ஏசா 5:20) என்று கூறுகிறது. கடவுளின் பார்வையில் தாம் எல்லாரும் பாவிகள். மனித குலம் பாவஞ்செய்து கெட்டழிந்து போனதினாலே அவர்களை இரட்சிக்க இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார். "நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திருப்புகிறதற்கு அழைக்க வந்தேன்" (மாற் 2:17) என்றார் இயேசு. அவர் நமது பாவத்துக்குத்தக்க தண்டனையை சிலுவையிலே சுமந்து எங்கள் மீறுதல்களினிமித்தம் நொறுக்கப்பட்டார்.

பாவத்திலிருந்து மனந்திரும்பும்படி இயேசு நம்மை அழைக்கிறார். நம் தேவன் பரிசுத்தர் ஆகையால், நாமும் பரிசுத்தமாக வேண்டும் என தேவன் விரும்புகிறார். பாவத்திலிருந்து விடுதலை பெறவழியிருக்கிறதென்று அறிந்தும், இன்னும் பலர் திரும்பத் திரும்ப தவறு செய்கின்றனர். எச்சரிக்கப்படும் போது செவிகொடுக்க விரும்பாமல், அவைகளை ஒத்துக் கொள்ள மறுக்கும் போது தேவகோபத்திற்கு ஆளாக வேண்டியுள்ளது. அவரது சத்தத்திற்கு செவி கொடுத்து நம்மை தாழ்த்தும் போது எங்களை பாவம் மேற்கொள்ளாத வாழ்க்கை வாழ உதவி செய்வார்.



## கிறிஸ்தவ குடும்ப வாழ்க்கை

**(சென்ற இதழ் தொடர்)**

கணவனும் மனைவியும் சிந்தனை ரீதியாக ஒன்றிணைந்து இருக்கும் வேளையில், தீர்க்கப்பட்ட பிரச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும் சேர்ந்து தீர்வு காண முடியும்.

மேலும், சிக்கல்களுக்கு தீர்வு கிடைக்காத பட்சத்திலும் ஜெபத்தினூடாக தேவனின் வழிநடத்தலை பெறக் கூடியதாக இருக்கின்றது. அதேபோல, ஒருவரின் கணவனையோ மனைவியோ தன்னுடைய நெருக்கமான நண்பன என்று கருதப்படுகின்ற வேளையில், முரண்பாடுகள் ஒருவரிடமிருந்து மற்றவரை பிரிந்து விடுவதைப் பார்க்கிலும், அவர்கள் இருவரும் சேர்ந்து ஆவிக்குரிய ரீதியில் வளருவதற்கு ஒரு சந்தர்ப்பமாக அமைகின்றது. (தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# தலைவர்களுக்கு தேவையான ஆறு அர்ப்பணிப்பு காரியங்கள்

தலைவர்கள் அநேக வேளைகளில் தங்களுக்கு என்றே ஒரு தராதரத்தை வைத்திருப்பார்கள். பிரதான தலைவர்கள் தாங்கள் வழிநடத்துபவர்களுக்கு செய்வதை பார்க்கிலும் பெரிய எதிர்ப்பார்ப்புகளை தங்களிடம் வைத்திருப்பார்கள். இதை செய்வதற்கு பெரிய பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கும். இதுதான் தலைமைத்துவம்!

புதிய ஏற்பாட்டில் "ஜாக்கிரதையாயிரு" என்ற பதம் அநேக தரம் வருவதை அவதானிக்கலாம். இதனடிப்படையில் தலைவர்கள் செய்யவேண்டிய ஆறு பொருத்தனைகளை அவதானிக்கலாம். நான் நம்புகிற பிரகாரம் இந்த ஆறு பொருத்தனைகளும் ஒரு வலுவான பலன் கொடுகிற ஊழியத்தை நோக்கி இட்டுச்செல்லும்.

**பிறரை ஊக்குவிப்பதற்கு பொருத்தனை செய்**

"ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம்." (ரோமர் 14:19) கிறிஸ்தவ தலைவன் என்ற முறையில் மக்களை கீழே தள்ளிவிடாமல் அவர்களை கட்டியெழுப்பும் பணியில் ஈடுபடவேண்டும். தேவன் உங்களை ஊக்குவிக்கும் தலைவராக இருப்பதற்கு அழைத்து இருக்கிறார். மாறாக ஒருவரைஅதைரியப்படுத்துவதற்கு அல்ல! நேரம் எடுத்து பிரச்சினைக்கு அப்பால் பார்த்து, நீர் வழிநடத்தும் மக்களிடமுள்ள செயற்திறனை அவதானிக்க வேண்டும். மக்கள் வாழ்க்கையில் அதைரியப்படுகிறார்கள். ஆனால் நீர் அவர்களுக்கு ஊக்குவிக்கும் ஒரு வழியாக இருக்க வேண்டும்.

நீர் தலைவராக மக்களுக்கு நம்பிக்கையின் வழியை காண்பிக்க வேண்டும். இதுதான் கிறிஸ்தவ தலைவனின் பங்கு. நாங்கள் நம்பிக்கையே இல்லாமல் இருக்கும் மக்களிடையே இயேசுவின் நம்பிக்கையை ஊற்ற வேண்டும். உதவியற்று இருக்கும் மக்களுக்கு உதவவேண்டும். நீர் அவர்களுக்கு உணர்த்துகின்ற காரியம் என்னவென்றால், அவர்களாலும் முடியுமென்ற காரியமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நீங்கள் உங்கள் புறச்சூழலில் உங்கள் சபையில், உங்கள் வீடுகளில் பிறரை ஊக்குவிக்கும் கருவியாக செயற்படுவீர்களாக?

**2. சமாதானம் பண்ணுவதற்கு பொருந்தனை செய்**

"சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" (எபே. 4:3).

தலைவர்கள் சிக்கல்களை குறைப்பதற்கு அல்லது விடுவிப்பதற்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கள் சமுதாயம் அநேக சிக்கல்களினால் நிறைந்துள்ளது. இயேசு சொன்னார் "சமாதானம் செய்பவர்கள் பாக்கியவான்கள்" நீர் எப்படி சீரழிந்துபோயுள்ள சமுதாயத்தில் சமாதானத்தை உண்டுபண்ணுவாய்?

நீர் ஆராதிக்கும் சபையில் உங்களைப் போன்று எல்லாரும் இருக்க மாட்டார்கள். அது பரவாயில்லை, ஆனால் எல்லோரும் ஏதோ ஒருவிதத்தில் பங்களிப்பு செய்வதற்கு அழைக்கப்பட்டு உள்ளார்கள். உலகத்தை வித்தியாசமாக நோக்கில் அவதானிக்கும் நபர்கள், ஊழியத்தில் புதிய வெகுமதிகளை உருவாக்கலாம்.

நீங்கள் ஒருவருடைய முகத்துக்கு முகம் பார்க்காமல், அவருடைய கையைகூட பிடித்து செய்யலாம். தேவன் நிகழ்ச்சிகளை பார்க்காமல் இருக்கலாம். தேவன் செயற்திறன்களை பார்க்காமல் இருக்கலாம். ஆனால் தேவன் பிரிந்திருக்கும் சபையை, ஐக்கியம் இல்லாமல் இருக்கும் சபையை ஆசீர்வதிப்பதில்லை எனவே உங்களுடைய முக்கியமான பொறுப்புக்களில் ஒன்று ஐக்கியத்ததை கட்டியெழுப்புவதேக்ஷ

அப்போஸ்தல நடபடிகளின் முதல் ஐந்து அதிகாரங்களில் பத்து முறை சபை ஐக்கியபட்டு இருந்தது என்று எழுதியிருப்பதை அவதானிக்கிறோம் எனவே ஐக்கியத்தின் வெளிப்பாடு இருக்கும் போது வல்லமை வெளிப்படும்.

உங்களுடைய சபையை கட்டியெழுப்பக் கூடிய தேவை உங்களுக்கு இருக்கிறதா?

தமிழாக்கம் : நிக்ஷன் லோரன்ஸ்

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஜோன் கெல்வின்...

(20ம் பக்கத் தொடர்)

வ்பெரெல் தங்களுடன் சேர்ந்து இறை பணி செய்யுமாறு கெல்வின்னிடம் வேண்டிக் கொண்டார். கெல்வின் தான் உயர்ந்த படிப்புக்களில் முன்னேற வேண்டுமெனத் திட்டமிட்டிருப்பதாகவும், இக்குழப்பமான காலத்தில் இது அசாத்தியமானது எனச் சொல்லிய வண்ணம் வ்பெரெல்லின் வேண்டுகோளுக்கு மறுப்புத் தெரிவித்தார். ஆனால் வ்பெரெல் கர்த்தரை நோக்கி, கெல்வினையும் தங்கள் பணியில் இணைத்துக் கொள்ள வேண்டுமென வஞ்சித்து ஜெபித்தனர். "உம்முடைய நம்பிக்கையை நிந்திப்பிரோ, படிப்புக்காக நீ அமைதியைத் தேடலாமோ? இப்படிப்பட்ட சிறந்ததோர் இறைபணிக்கு உமது ஆதரவையும் அற்புணிப்பையும் நிராகரிக்கலாமோ?" இவ்வார்த்தைகளைக் கேட்டதும் கெல்வின் "இந்த வார்த்தைகள் என் இருதயத்தை நொருக்கியது, நான் தொடங்கிய பயணத்தை இடை நிறுத்தினேன்" என்ற தனது அறிக்கையுடன் மேலும் ஜெனிவாவின் சீர்திருத்தவாதியாக தமது வாழ்க்கையை ஆரம்பித்தார்.

ஜெனீவாவில், ரோம சாம்பிராச்சியத்துக்கு அடிபணிய மறுத்து தங்களுடைய தேசியத் தலைவருடன் தப்யோடிக் குடியேறிய சவோய் தேசத்துப் பிதாக்கள், தங்களுக்குப் போதகராகக் கெல்வினைத் தேர்ந்தெடுத்தார்கள். அரசாங்கத்தைப் போல நடைமுறைப்படுகிற ஓர் நிர்வாக சபை ஆரம்பித்தது. இச்சபை 1537 இல் ஆடிமாதம் ரோமன் கத்தோலிக்கத்தின் சகலவிதமான நியாய மற்ற விஞ்ஞாபனங்களுக்கெதிரான உயர்ந்த நடவடிக்கைகளை முன்மொழிந்தது. அவற்றுள் முக்கியமாக ஜெபமாலை உருட்டுதல், மரபுரீதியான சில சடங்காச்சாரங்கள், சிலைகளை தூக்கி வீதிவலம் வருதல் போன்றன. விபச்சாரம் போன்ற தீய நடத்தைகளை மேற்கொள்வோர் தண்டிக்கப்படுதல், சூதாடுதல், சூறையாடுதல் போன்றவற்றில் ஈடுபடுவோர் நாடு கடத்தப்படுதல் போன்றவையாகும். இவ்வாறாக 1537 இல் சந்தோஷ சீர்திருத்த ஆண்டாக மாறிவரினும், 1538 ஆம் ஆண்டு பல அதிக வாக்குகளால் கத்தோலிக்கர்கள் சபையின் பெரும்பான்மையைக் கைப்பற்றினர். இந்தப் புதிய அரசாங்கம் (சபை) கெல்வினையும் வ்பெரெலையும் நாடு கடத்தியது. கெல்வின் ஸ்ரார்ஸ்போக்குக்கும், வ்பெரெல் நியூச்செற்றல் என்ற பிரதேசங்களுக்குச் சென்றனர்.

ஸ்ரார்ஸ்போக்கில் கெல்வின் ஒரு சிறு பிரான்ஸிய தேசத்துப் புரட்டஸ்தாந்து சபையினருக்கு ஊழியம் செய்தார். 1540 இல் அடிலேட் டீ பியூரி எனும் பெயருடைய ஓர் விதவைப் பெண்ணை மணந்தார். அவர் அவளுக்கு ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். ஆனால் அது குழந்தைப் பருவ் பருவத்திலேயே இறந்து விட்டது. பின்னர் அவள் தனது இறுதிக் காலம் வரை கெல்வினுடன் சந்தோஷமாகவே வாழ்ந்து 1549 இல் மரித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

1559 ஆம் ஆண்டில் கெல்வின் ஜெனீவாவில் ஓர் இறையியல் கல்லூரியைத் திறந்து வைக்கும் பொழுது தமது உயர்ந்த கனவுகளில் ஒன்று நிறைவேறுவதாகச் சொன்னார். அதாவது தியோட்டர் பெஷா இறுதியாகத் தமது நிர்வாகத்தின் கீழ் இந்த ஜெனீவா நகரின் இறையியல் தலைவராக தம்மைப் பதவியுயர்த்தப்போவதேயாகும். ஜெனீவா இளைஞர்கள் கல்வி நிலைய நியதிகளுக்கேற்ப கற்பிக்கப்படுகிறார்கள். அநேகமான மாணவர்கள் ஐரோப்பாவின் பல பாகங்களிலமிருந்து வந்தவர்கள். இவர்கள் கல்வி முடிந்து தங்கள் தேசங்களுக்குப் போகும் போதும் இங்கே கற்பிக்கப்படும் கெல்வினின் இறையியற் கோட்பாடுகளுடனேயே போனார்கள். இதே கெல்வின் நியதிகளுக்கமைவாகவே தென் கொரியா தேசத்தில் நான் படித்துக் கொண்டிருக்கும் அந்தியோக் சர்வதேச இறையியல் கல்லூரியும் விளங்குகிறது என்பதில் பெருமைப்படுகின்றேன். எமது கல்லூரி ஸ்தாபகர் வண. கலாநிதி தோமஸ் வாங் ஓர் கெல்வின் இறையியலாளர்.

## கெல்வினும் கெல்வினிசியமும் (இறையியல்)

கெல்வின் 1536 இல் வெளியிட்ட கிறிஸ்தவ இறையியல் இலக்கிய வெளியீட்டு நூல் அவரது இறையியல் கருத்துக்களை தெளிவுபடுத்துகிறது. இந்த நூல் மிகவும் அறிவியல் ரீதியாகவும், சட்டவியல் ரீதியாகவும், மெய்யியல் ரீதியாகவும் எல்லா புரட்டஸ்தாந்தினருக்கும் இறையியற் கோட்பாடு பற்றி தெளிவான சரியான உயர்ந்த விளக்கவுரையாக ஒளிர்கிறது. கெல்வின் தனது முதலாவது வெளியீட்டை இலத்தின் மொழியிலேயே 1539 பக்கங்களைக் கொண்ட நூலாக ஆக்கியுள்ளார். பின்னர் பிரான்ஸ் மொழியிலும் மொழிபெயர்த்துள்ளார்.

இத்தாலியின் பொருளடக்கம், கடவுளின் (இறைவனின்) அற்புதமான இயல்பு. அங்கே இறைவனுக்கும் அவரினால் படைக்கப்பட்ட மனிதனுக்கும் இடையில் பாவம் அமைக்க முடியாத ஓர் பெருங்குழியான பள்ளத்தக்கான இடைவெளி. மனிதன் தன்னை தானாக மீட்க முடியாத ஒரு பரிபூரணமான பாவி. மனிதனுடைய உயர்ந்த சிந்தனைகளுக்கப்பால் இறைவனுடைய மகிமையும் வல்லமையும் பல மைல் தூரமாயிருக்கிறது. அவர் எல்லாம் வல்லவரும், எல்லாம் அறிபவரும், எங்கும் நிறைந்தவருமாக இருக்கிறார். கடந்த காலங்களையும் வருங்காலங்களையும் இறைவனே திட்டமிடுகிறவர். மனிதன் இறைசித்தத்தின் முன் உதவியற்றவனாகிறான். இறைவனே நித்திய பேரின்ப வாழ்வையும் நித்திய நரகவாழ்வையும் முன்விதிப்பவர். இந்த இறைவனின் முன்விதித்தல் அல்லது முன்னேற்பாடு போட்பாடு கெல்வின் இறையியற் சிந்தனையில் இல்லை. ஆனால் அவர் இறைவனின் இப்பயங்கர விளைவாகிய நித்திய நரகத்திலிருந்து மனிதன் காக்கப்பட வேண்டுமென்பதை தெளிவுபடுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இறைவனால் அவருக்கு சேவை செய்யத் தெரிந்து கொள்ளப்பட்ட சிறு கூட்டத்தினருக்கு அவர் விசுவாசத்தின் வாயிலாக அவரை அடையும் உன்னத பாக்கியத்தை கொடுத்துள்ளார். அந்த உயர்ந்த கொடை விசுவாசம் குறித்ததே. ஏனெனில் எல்லா மனிதரும் இரட்சிப்படையத் தகுதியற்றவர்கள். எல்லோரும் நரகத்துக்கே உரியவர்கள், ஏனெனில் இறைவனின் நியாயத்தீர்ப்பு அதையே உறுதிப்படுத்துகிறது. ஆனாலும் இறைவன் நீதிபதியாக இருப்பது போல முடிவில்லாத இரக்கம் நிறைந்தவராகவும் இருக்கிறார். அவருடைய இரக்கம் வானத்துக் கதவுகள் திறக்கும்படி இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. கத்தோலிக்க இறையியலாளர் நம்புவது போல, மரித்த ஆவிகள் முன் சென்று தங்களது உறவினர்களுக்காக நல்ல இடத்தை ஆயத்தம் செய்வது போல் அல்ல. மரித்த ஆவிகள் அங்கே தங்களுடைய உறவினர்களுக்காக பரிந்து பேசமுடியாது என்பது கெல்வின் வாதம்.

மனிதன் பேரின்பவாழ்வை அடைவதற்கு பெரும் திருவிழாக்களும் பண்டிகைகளும் அல்ல இவைகளை இறைவன் வெறுக்கிறார். உண்மையான உள்ளத்தோடும் ஆவியோடும் ஜெபிப்பது உகந்த வழி. கத்தோலிக்க ஆராதனை சத்தியத்திற்குப் புறம்பானதும், மரியாதைக்குரியதுமாக இருக்கிறது. ஏனெனில் கத்தோலிக்க குரு சாக்கிரமத்து (நற்கருணை) ஆராதனையின் போது அப்பத்தையும் திராட்சை இரசத்தையும் உடலுக்குள்ளும் கிறிஸ்துவத்தின் இரத்தத்துக்குள்ளும் மாற்றுகிறார். அப்பத்தை மட்டுமே கொடுக்கிறார் ஆனால் ரசம் (குருதி) கொடுக்கப்படுவதில்லை, குருதியினாலன்று விடுதலை இல்லை, இது ஏன் மறுக்கப்படுகிறது? இது கெல்வின் கேள்வி.

ரோமன் கத்தோலிக்க திருச்சபை ஏழு திருவருட் சாதனங்களை (சாக்கிரமந்துக்களை) வழங்குகிறது. ஆனால் கெல்வின் லூத்தர் கொள்கையான திருமுழுக்கு, திருவிருந்து ஆகிய இரு திருவருட்சாதனங்களையே திருமறையின் அடிப்படையில் ஏற்றுக் கொள்கிறார்.

திருச்சபையைக் குறித்து கெல்வினின் குறையியல் கருத்து காணக் கூடிய திருச்சபைக்கும் உண்மைத் திருச்சபைக்கும் இடையில் ஓர் உயர்ந்த நிலைப்பாட்டை உருவாக்கிறார். கண்ணாரக் காணக் கூடிய *திருச்சபை என்பது தேவனுடைய பிள்ளைகள், இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகள* (1கொரி 3:17) *உண்மை திருச்சபை என்பது இயேசு கிறிஸ்து* (கொலோ 1:18) கிறிஸ்து நமக்குள்ளும் நாம் கிறிஸ்துவுக்குள்ளும், ஒன்றாக ஒருமித்திருத்தலையே கெல்வின் வலியுறுத்துகிறார். இச்சிந்தனை பவுலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிந்தனை இதனையே கெல்வினும் கையாளுகிறார். நரகலோகம் பற்றிய பயத்தில் உழலுவதைவிட, நாம் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனம் என்பதை விசுவாசித்தால் நமது விசுவாசக் கண்களால் பரம அரசை அடையலாம் பேரின்ப வாழ்க்வை வாழலாம். அதுவே நாம் பேறுபெற்ற பயன் என்பதை உணர்த்துவதே கெல்வினின் இறையியல்.

## இறுதியுரையும் பிரியாவிடையும்

எந்த வகையிலும் இறையியலாளர் கெல்வின் இறைத் தொண்டில் ஈடிணையற்றதாக எழுச்சி பெற்ற எழுத்துத்துறையும் கல்வித்துறையும் கிறிஸ்து பெருமானின் நாமத்தை மகிமையுறச் செய்தது, குறிப்பாக ஜெனீவா இறையியற் கல்லூரி, கெல்வின் இறையியலை ஐரோப்பாவின் பல பாகங்க்ளிலும் பரவச் செய்தது. இறுதியாக அதிகமான திருச்சபைகள் நெதர்லாந்து, ஸ்கொட்லாந்து, ஹங்கெரி, பிரான்ஸ் போன்ற பல நாடுகளின் தோன்றின.

ஜோன் கெல்வின் தன் இறுதிக்காலம் நெருங்குவதை உணர்ந்தாற் போல தமது சித்தத்தை தேவசுதன் இயேசுவில் ஆதாயப்படுத்தி, தமது பிரியாவிடையை தமது நெருக்கமான தோழர்களுக்கு அளித்தார். நெருச்சாற்றல் எனும் பிரதேசத்திற்கு அண்மையில் சீர்திருத்தத்திற்கு தலைமை தாங்கும் பொறுப்பை எடுத்துக் கொண்ட வ்பெரெல் ஒரு இறுதிச் சந்திப்பாகத் தமது நண்பர் கெல்வினிடம் வந்தார். கெல்வின் பங்குனித் திங்கள் 27 ஆம் நாள் 1564 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

ஜோன் கெல்வினது 500வது பிறந்த தினத்தை நிறைவுகூறுகின்ற இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்தத் திருச்சபை உறுப்பினர்களுக்கும், தூதன் வாசகர்களுக்கும் எனது வாழ்த்துக்கள். தேவ கிருபை எப்பொழுதும் உங்களோடிருப்பதாக. தேவன் உங்களை வழிநடத்துவாராக.


## வாழ்த்துக்கள்

**(1642.10.06 - 2009.10.06)**

367 நிறைவாண்டினை கொண்டாடும்

இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபைக்கு

தூதன் வாசகர் சார்பில் வாழ்த்துக்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வேதாகமம்...

(11ம் பக்கத் தொடர்)

அதற்கு அச்சிறுவன் "நான் கடலை இக் குழிக்குள் போட முயற்சித்துக் கொண்டிருக்கின்றேன்" என்றான்.

சிறுவனின் அப்பதிலைக் கேட்ட ஒகஸ்டின் அடிகள் சிரித்தவாறே "இது என்ன முட்டாள் தனம்" என எண்ணினாராம். அப்போது அவருக்குள்ளே தேவ ஆவியானவர் உணர்த்திய ஓர் காரியம். இச்சிறுவனது இம்முயற்சி எவ்வளவு முட்டாள் தனமோ, அதைப் போன்றதே கடலைவிட விசாலமான திரியேக தேவனைக் குறித்து ஓர் இலகுவான உபதேசத்தை முன்வைப்பதும் என்பதுவாகும்.

அதாவது, திரித்துவத்தைக் குறித்து குறைவான மனித அறிவை கொண்டு புரிந்து கொள்ள முற்படுவது, ஒரு சிறு குழிக்குள் முழு சமுத்திரத்தையும் போட முற்படுவதற்குச் சமமானது என்பதுவே அதுவாகும்.

எனவே, எமது சிறிய அறிவைக் கொண்டு திரித்துவ தேவனைப் பற்றி நாம் சரியாக அறிந்து கொள்ள வேண்டுமானால், அவர் தன்னை வெளிப்படுத்தியுள்ள பரிசுத்த வேதாகமத்தின் மூலமாக மட்டுமே அவரை நாம் அறிந்து கொள்ள முடியும்.

இன்று அநேகர் இந்த வேதாகம அறிவில்லாமையால் தான், ஒரு சாரார் பிதாவாகிய தேவனை பற்றிக் கொண்டு குமாரனாகிய தேவனை அசட்டை பண்ணுகிறார்கள். ஆனால் பரிசுத்த வேதாகமம் **"ஒன்றான மெய்த்தேவனையும் அவர் அனுப்பின இயேசு கிறிஸ்துவையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். இதுவே நித்திய ஜீவன்.** அதாவது மெய்வாழ்வு" என்கின்றது (யோவா 17:3). அத்துடன் இயேசு கிறிஸ்துவும் கூட **"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே"** என்றார். (யோவா 5:39) மேலும் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போது மட்டுமே தேவன் அருளும் மெய்வாழ்வான நித்திய ஜீவன் கிடைக்கும். மற்றவர்களுக்கு இந்த ஜீவன் கிடைப்பதில்லை என்றும் (யோவா 3:36) இயேசு கிறிஸ்து எவர்களுடைய வாழ்வில் இருக்கிறாரோ அவர்களுக்கு மட்டுமே நித்திய ஜீவன் உண்டு என்றும் -1யோவா 5:12- இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டால் மாத்திரமே இந்த நித்திய ஜீவனை நாம் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் கூறுகின்றது.

அதே வண்ணமாக ஒரு சாரார் "இயேசு கிறிஸ்து" மாத்திரமே தேவன் என்கின்றார்கள், இன்று உலகமெங்கிலுமுள்ள பெரும்பாலான சபைகளில் இயேசு கிறிஸ்துவிற்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். (இதற்குள் எல்லா பிரிவு கிறிஸ்தவ சபைகளும் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆனால் பிதாவாகிய தேவன் பரிசுத்த வேதாகமத்தில் "நான் பிதாவானால் என் கனம் எங்கே" (மல் 1:6) எனக் கேட்கிறார்.

இன்னும் சிலரோ, பிதாவுடையதும், குமாரனுடையதும் காலம் முடிந்துவிட்டது இது "ஆவியானவரின் காலம்" எனக் கூறி ஆவியானவரையும், அவரது "வரங்களையும்" அவரது "அபிஷேகத்தையும்" முதன்மைப்படுத்தி பிதாவாகிய தேவனையும், குமாரனாகிய தேவனையும் புறம்பே தள்ளிவிட்டார்கள். ஆனால் வேதம் தெளிவாக கூறுகின்றது. "இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து. குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடையவனல்ல, குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான்" (1யோவா 2:22-23).

எனவே முதலாவதாக திரித்துவமாய் அன்றும் இன்றும் செயற்படும் தேவனைப் பற்றிய அறிவில் நாம் தேறினவர்களாக இருக்கவே தேவன் வேதாகமத்தை எமது மொழியிலேயே எழுதி எமது கைகளில் தந்திருக்கிறார்.

## 2. தேவனோடு உறவு கொள்ள

தன்னைப் பற்றி மக்கள் வெறுமனே அறிந்து கொள்வதற்காக மாத்திரமே தேவன் தன்னை வேதாகமத்தில் வெளிப்படுத்தவில்லை. மாறாக, அவரைப் பற்றி அறிந்து கொள்வதன் மூலமாக அவரோடு ஒரு ஜீவனுள்ள உறவை மக்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே தன்னை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த உறவானது இயேசு கிறிஸ்துவை நமது சொந்த இரட்சகராக நாம் ஏற்றுக் கொள்வதின் மூலம் நமக்கு கிடைக்கிறது. இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொள்பவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகின்றார்கள் (யோவா 1:12).

எனவே வேதாகமத்தை வாசிக்கும் போது அதில் தேவனைப் பற்றி அறிந்து கொள்வது மட்டும் போதாது, ஜீவனுள்ள தெய்வமான அவரோடு, ஜீவனுள்ள உறவொன்றையும் நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே தேவனைப் பற்றி சரியான அறிவை நாம் பெறவும் அவரோடு உறவை ஏற்படுத்திக் கொள்ளவுமே பரிசுத்த வேதாகமம் எழுதப்பட்டுள்ளது.

## 3. தேவசித்தத்தை நன்கு அறிய (மீகா 6:8)

"மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்" (மீகா 6:8).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"நமது இரட்சகராகிய இயேசு, பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்" (மத் 12:50) என்றும் அவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பான் என்றும் (மத் 7:21) கூறியுள்ளார். எனவே பிதாவின் சித்தத்தை நாம் நன்கு அறியவும் அதன்படி செய்யவும் வேண்டுமானால் நாம் அவர் எப்படிப்பட்டவர்? அவரது தன்மை என்ன? அவர் எதை விரும்புகிறார்? அவர் எதை அருவருக்கிறார்? என்பவைகளை நாம் அறிவதின் மூலமே முடியும். அதற்கு எமக்கு உதவும் படியே பரிசுத்த வேதாகமம் எழுதப்பட்டுள்ளது (யோசு 1:8 உ+ம் சங் 1:2-3).

**4) தேவன் விரும்பும் வாழ்வு வாழ** (2தீமோ 3:16 - 17)

தேவன் விரும்பும்படியான சரியான கிறிஸ்தவ வாழ்வு வாழ வேண்டுமானால் நாம் தேவனுடைய வார்த்தையை நன்கு அறிந்தவர்களாக, அதில் நிலைத்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும். அப்படி நாம் வாழும்படியாகவே வேதாகமம் எழுதப்பட்டுள்ளது.

நாம் எவ்வாறான வாழ்வு வாழ வேண்டும் என பிதாவாகிய தேவன் விரும்புகிறார் என்பதை யோவா 15:7ல் இயேசு தெளிவாக கூறி இருக்கிறார். **"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்".** அதற்கு நாம் அவருடைய வார்த்தையை அறிந்து அதில் நிலைத்திருக்க வேண்டும். இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: **"நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால், மெய்யாகவே, என் சீஷராயிருப்பீர்கள்" (யோவா 8:31)** எனவே, நாம் **தேவன் விரும்பும் நற்கிரியைகளை (காரியங்களை) செய்யவும், தேவன் விரும்பாத காரியங்களை எம் வாழ்விலிருந்து அகற்றவும்,** (2தீமோ 3:16b-17) நாம் வேதாகமத்தை அறிந்தவர்களாக இருக்க வேண்டும்.

ஆகவே, திரித்துவ தேவனை பற்றிய அறிவில் நாம் தேறவும், அத் திரித்துவ தேவனோடு உறவு கொள்ளவும், அத்தேவனுடைய சித்தத்தை நன்கு அறியவும், அத்தேவன் விரும்பும் வாழ்வு வாழவுமே பரிசுத்த வேதாகமம் எழுதப்பட்டுள்ளது.

*கொகுவளை, நுகேகொட, கிருலபனை பகுதி விசுவாசிகளுக்கு*

**காலை ஆராதனை**

காலம் : பிரதி ஞாயிறு தோறும் நேரம் : காலை 7.15 மணி
இடம் : *இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபை*
2, முதலியார் அவெனியூ, கொகுவளை, நுகேகொட
தொடர்பு : போதகர் எப். ரிக்ஷன் - 2814137 or 0772226217






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தூதனின் பார்வையில்...

### ஜோன் கெல்வின் கருத்தரங்கு





ஜோன் கென்வினுடைய 500வது பிறந்த தினத்தை நினைவுகூறும் முகமாக கடந்த 27.06.2009 - தலைமைத்துவக் கருத்தரங்கு வெள்ளவத்தை கெல்வின் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.

### வேதவினா விடை போட்டி




மகளிர்களுக்கான வேதவினா விடை போட்டி வெள்ளவத்தை ஆலய மண்டபத்தில் கடந்த 25.07.2009 நடைபெற்றது. இதில் முதலாமிடத்தை றீஜன்வீதி ஆலய மகளிர் அணியும், இரண்டாமிடத்தை வூல்வெண்டால் மகளிர் அணியும் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## யோசுவா (Joshua)

யோசுவா எப்பிராயீம் கோத்திரத்தைச் சேர்ந்த நூனின் குமாரன். யோசுவாவின் மறுபெயர் ஓசேயா (எண். 13:8). யோசுவா என்பதற்கு 'யேகோவா மீட்பர்' என அர்த்தமாகும். இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்படும் போது யோசுவாவுக்கு 40 வயது.

அமலேக்கியர் இஸ்ரவேலரோடு யுத்தஞ் செய்த போது யோசுவா சேனாதிபதியாயிருந்தான். கானான் தேசத்தை வேவு பார்க்கப் போய் வந்து, ஜனங்களைத் தைரியப்படுத்திய இருவரில் ஒருவர்.

கர்த்தரின் கட்டளைப்படி மோசே தனக்குப்பின் யோசுவாவை இஸ்ரவேல் புத்திரர்களின் தலைவனாக நியமனம் செய்து, அபிஷேகம் செய்தான் (உபா. 34:9).

மோசே மரித்தபின், இஸ்ரவேல் ஜனங்களை யோர்தானைக் கடக்கச் செய்து, எரிகோவை கைப்பற்றி எமோரியரை சங்கரித்த பின், கில்காலில் பாளயமிறங்கினான். மேலும் கானானிய ராஜாக்களை தோற்கடித்து, முப்பத்தொரு ராஜாக்களை கீழ்ப்படுத்தி கானான் தேசத்தை சுதந்தரித்து, இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்து நிலத்தைப் பகிர்ந்தளித்தான்.

பின்பு, இஸ்ரவேல் ஜனங்களை சீகேமில் கூடிவரச் செய்து புத்திமதி கூறி, உடன்படிக்கை செய்வித்தான். யோசுவா 110 வயதில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். யோசுவாவின் காலம் கி.மு 1530 - கி.மு 1420 வரையாகும்.

"சூரியனே, நீ கிபியோன் மேலும், சந்திரனே, நீ ஆயலோன் பள்ளத்தாக்கின் மேலும், தரித்து நில்லுங்கள்" என்றான். "கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்கேட்ட அந்நாளையொத்த நாள் அதற்கு முன்னுமில்லை, அதற்குப் பின்னுமில்லை; கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணினார்" (யோசு. 10: 12, 14).

யோசுவா கர்த்தருக்குள் அதிசய மாமனிதனானான்.

STAMP

To: ........................................

From:
"THOOTHAN"
CHRISTIAN REFORMED CHURCH OF SRI LANKA
363, GALLE ROAD,
COLOMBO 06

"THOOTHAN"
Published on [illegible]
by CHRISTIAN REFORMED CHURCH OF SRI LANKA
363, GALLE ROAD, COLOMBO 06
Edited by : W. PAUL WILSON
Printed by : KANAM GRAPHICS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media